# வெற்றி வீரர்களே, வருக, வருக!


திராவிடநாடு

மலர் 9 | 26-11-50 | இதழ் 23

இலங்கை 15 சதம்] [விலை அணா 2


# சிறைக்கதவு திறந்தது— சிங்கங்கள் வந்தனர்

## புன்னகை காட்டினர்

## மாலைகளிட்டு வரவேற்றனர்

டில்லி மந்திரி ஆச்சாரியாருக்கு சென்னையில் கருப்புக் கொடி காட்டச்சென்றதற்காக 6—11—50அன்று இரண்டு வாரம் கடுங்காவல் தண்டனை பெற்று சென்னைச் சிறையில் அடைபட்டுக்கிடந்த இயக்க வீரர்கள் 18—11—50அன்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறையிலிருந்து வெளியே வந்த இலட்சிய வீரர்களை கழகத் தோழர்களும் பொது மக்களும் ஏராளமாகக் கூடி நின்று வரவேற்றனர்.

முக மலர்ச்சியோடு, 'ஆளவந்தாரின் அடக்குமுறையால் நாங்கள் அஞ்சிட மாட்டோம்' என்று கூறுவது போல ஏறு நடையுடன், சிரித்த முகத்துடன் தோழர்கள் யாவரும் வெளியே வந்தனர்.

சிறையில் அதிகாரிகள் கண்ணியத்தோடேயே நடந்து கொண்டதாகவும், 'சிறை வாழ்க்கை தங்கள் சிந்தனையை அதிகப்படுத்தியதாகவும்', தோழர்கள் நமது நிருபரிடம் அறிவித்தனர்.

சிறை நீங்கிய தோழர்களை வரவேற்க, சிறைவாயிலில் குழுமியிருந்த மக்கள் கூட்டத்தில் தோழர்களான, என்-வி-நடராசன், கே-கோவிந்தசாமி, டாக்டர் கிணேசன் எம்-எல் எம்-மொகைதீன், வி-கண்ணன், பச்சையப்பன் கல்லூரி கண்ணன், சண்முகம் — எஸ்-லாசரஸ் (9வது வட்டம்) அப்பனுவரம்: ஆர்-பாலசுந்தரன், கே-பி-லிங்கம், திருவல்லிக் கேணி: டி-ராதாகிருஷ்ணன், ஜீ- துரைராஜ், ப-மணி, டி-தலைக்கன்னு, இராயபுரம்: என்- ஆர்- நடராசன், ஆர்-மாதவன், பி- ஆர்- அர்ச்சனன் கே- ஏ-சம்பந்தன், வி- கே-சாமி, பெரம்பூர்: எம்- செகநாதன், பேசின்பிரிட்ஜ் பி-என் மணி, 14வது வட்டம்: வி- ஜி- சுப்பிரமணியன், பெரம்பூர் பாரக்ஸ்: ஏ- கே- சாமி, காஞ்சிபுரம்: ஆர்- கே-மூர்த்தி, எம்- நாகராசன், வெ- சம்பந்தன், ஏகாம்பரம், சீனிவாசன், சிவக்கொழுந்து, முதலாய இயக்கத் தோழர்களும், தொண்டர்களை வரவேற்கத் திரண்டிருந்தனர்.

தொண்டர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப் பட்டன. புகைப்படமும் எடுக்கப்பட்டது.

சிறையிலிருந்து விடுதலை பெற்ற வீரர்கள்:—

| | |
|---|---|
| புதுப்பேட்டை | — ஆர். சம்பந்தம் |
| 14-வது வட்டம் | — கே- ராசு |
| ” | — கே- ஜெயராம் |
| ஜூனை | — கே- பி- ஜெகபதி |
| வடசென்னை | — கே- வி- கே- சாமி |
| புதுப்பேட்டை | — கோ- கன்னியப்பன் |
| திருவட்டீஸ்வரன் பேட்டை | — டி- கே- பாலி |
| அப்பனுவரம் | — பி- லோகநாதன் |

(8-ம் பக்கம் பார்க்க)

# பிள்ளையின் பிணம் தெருவிலே! பிச்சை கேட்கிற தாய் அருகிலே!

கண்ணை மூடிக் கொள்ளாதீர்!

கோரமான இக்காட்சி வேறு எங்குமல்ல;

"அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்து குவியும் கடல்கள்

முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக்காடு மணக்கும் நாடு"



என்று பெருமிதத்தோடு கூறுகிறீர்களே, அந்நாட்டின் தெருவீதியிலே, இப்போது நாம் காண்பது.

தோலும் எலும்பும்! துள்ளி விளையாடி குதித்துச் சிரித்து, தாய் தந்தையரை மகிழ்விக்கவேண்டிய பச்சைப் பாலகன் மூன்று வயதுச் சிறுவன் — இந்நாட்டின் எதிர்காலப் பிரஜையின்-கதி, இது. தாய்மார் கண்டால் தவிப்பர், பெரியோர் கண்ணுற்றால் பதைப்பர், நமக்கோ நரம்பெல்லாம் தளர்கிறது, மூச்செல்லாம் கொதிக்கிறது, இதயம் கண்ணீர் சொரிகிறது!

'வாழப் பிறந்த உயிர், மண்ணிலே கிடக்கிறது, தோலும் எலும்புமாய்!

கொஞ்சி எடுத்து அணைத்து முத்தமிட்டு 'கண்ணே! மணியே' என்று தாலாட்டிச் சீராட்டிய தாய்—அதோ, கண்ணீரும் கம்பலையுமாய் உட்கார்ந்திருக்கிறாள். செல்வக் குழந்தையைப்பறி கொடுத்துவிட்டு, சோக பிம்பமாய், அழுதுகிடக்கும் அந்த அம்மையைப் பாருங்கள்!

அவர் வேறு யாருமல்ல—'வீரத் தாய்மார் விளையாடிய தண்டமிழ் நாடு என்றபாணி பாடுகிறோமே, அந்த வழியில் வந்தவர்தான்! அழகின் சிரிப்புகளாகக் காதலோடு நிலவையும் கடலையும் பாடி மகிழ்ந்த தமிழ் மகளிர் என்று கர்ஜிக்கிறோமே — அந்தப் பரப்பரையைச் சேர்ந்தவர்தான்!

எண்ணெய் காணாத தலை, கந்தல் துணி, புழுதி படிந்த உடல்—ஐயோ சகிக்க முடியவில்லை! பொன்னார் திராவிடத்தின் பெண்மணி—அவர். வளமிக்க நாட்டின் திருச்செல்வி அவர். அவருடைய நாடு பெரியது, அங்கு மக்களும் இருக்கிறார்கள், செல்வம் இல்லாமல் இல்லை, மாடமாளிகைகள் நிறைய இருக்கின்றன, கோயில்கள் எங்கும்! கோபுரச் சிறப்பு பற்றி பேசித் திரியும் 'பெம்மான்கள்' உண்டு! — எனினும், அவருக்கு எதுவும் இல்லை. தன்னுடையது என்று கூறிக்கொள்ள ஓட்டைச் சட்டி, உடைந்த மண்பாண்டம், கந்தல் துணி—

"வானிடை மிதந்திடும் தென்றலிலே
மணிமாடங்கள் கூடங்கள் மீதினிலே"

இருப்பாராம், நமது பெண்கள்! பழம் பெருமை கூறுகிறது! இந்த அம்மையாருக்குத் தென்றல் தெரியாது—மாடமும கூடமும் அவருக்கு அந்த மண்தரைதான்! அவரும தமிழ் நாட்டுப் பெண்தான்!! அவர் பிறந்த தமிழ் நாடு — புயலால், பூகம்பத்தால், வெடித்துச் சிதறி வெண்மணல் காடாகிவிடவில்லை! நெல்லும் கரும்பும் அற்றுப் பாலைவனமாகிவிடவில்லை! ஆனாலும், அவருடைய 'சொத்து' மண் பாண்டம்! ஓட்டைச் சட்டி!! அவரது ஆசைச் செல்வன் 'தோலும் எலும்பும்!'

* * *

கண்ணைக் குத்தும் இக்கோரக் காட்சி இரு திங்களுக்கு முன் சேலம் வீதியிலே, விக்டோரியா

(5-ம் பக்கம் பார்க்க)



# மதுரைக்கு மெஹ்தாப் வரவில்லை

## 'காட்கிலானர்' மெஹ்தாப்!

மதுரையில் நவம்பர் 18, 19, 20 தேதிகளில் நடந்த கதர் உபகரண மகாநாட்டில் வடநாட்டு மந்திரி ஹரிகிருஷ்ண மெஹ்தாப் கலந்து கொள்ளப் போகிறார் என்று எல்லா பத்திரிகைகளும் விளம்பரப்படுத்தின.

இந்தச் செய்தியைக் கண்ட, மதுரை மாவட்ட தி- மு- க- தோழர்கள், மத்தியகழக திட்டப் படி, கருப்புக் கொடி காட்ட எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

ஆனால் அவர் வரவில்லை. காரணம் புரியவில்லை.

சென்னைக்கு வருவதாக இருந்த காட்கிலும் இப்படித்தான், ஏதோ காரணம் காட்டி வராமலிருந்து விட்டார். மதுரையிலே இவரும்வரவில்லை. சென்னை 'காட்கில்', மதுரை 'மெஹ்தாப்' இப்படியேஅவர்கள், தென்னாட்டு வருகைகள் எல்லாம் நின்றுபோய் விடுமோ, என்னவோ!

மந்திரிமார்கள் வர் சுற்றுவதிலே பெயர் பெற்ற பெரு வீரர்களாக இருக்கிறார்கள், ஒரு வாரத்திலே 'டெல்லி'யை காலியாக இருந்ததாம். பிரதமர் நேரு இந்தோனேஷியா சென்றுவிட்டார். பட்டேல், சொந்த ஊருக்கு ஓய்வு வேண்டிப் போய்விட்டார். ஜஸ்வந்ராய், ஜெனிவா நோக்கிப் பறந்துவிட்டார். ராஜகுமாரி அமிர்தகௌர் இலண்டன்மா நகரை அடைந்துவிட்டார். ஆச்சாரியார் சென்னை வந்துவிட்டார். அம்பேத்கார் இலங்கைக்குப் போய்விட்டார். இப்படி ஒரு வாரத்தில் மந்திரிகள் 'டெல்லி'யை காலியாக்கி விட்டு எங்கெங்கோ சென்றுவிட்டனராம்-இப்படி வர் 'தங்காத' உத்தமர்கள், தென்னாட்டுப் பயணத்தை திடீர் திடீர் என ரத்து செய்கிறார்கள். ஏனோ தெரியவில்லை!

### சுயராஜ்யம்!

—✱—

"கடந்த நான்கு மாதங்களில் இந்திய இரயில்வேயில் மொத்தம் 653 விபத்துகள் ஏற்பட்டுள்ளன. இதனால் ஏற்பட்டுள்ள நஷ்டம் சுமார் ரூ 12,36,000"

# புது சமுதாயம் பூத்திடச் செய்வோம்!

## ஆராய்ச்சிக் கருத்துரை

### அறிஞர் அப்பாதுரை விளக்கம்

[சென்னையில் நடந்த திராவிட மாணவ முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் அறிஞர் கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி. ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். அவர் பேச்சின் கருத்துச் சுருக்கம் இது.]

திராவிட இயக்கத்தின் நோக்கமும் அதன் எல்லா அமைப்புக்களின் நோக்கமும் திராவிட நாட்டைப் பெறுவதே. அத்திராவிட நாடு தன்னுரிமையும் தற்சார்பும் உடைய சமதர்மக் குடியரசாயிருக்கவேண்டுமென்றும்; அக்குடியரசு சாதியற்ற, வகுப்பற்ற, சமயச் சார்பற்ற புதியதோரு சமுதாய அமைப்பின் அடிப்படையில் அமைய வேண்டுமென்றும் நாம் உறுதி கொண்டிருக்கிறோம். இவ்வுறுதி நம் நாடாகிய திராவிட நாட்டின் சுய நிர்ணய உரிமையை மட்டுமன்றி; அதன் உறுப்புக்களாகிய தமிழகம், ஆந்திரம், கன்னடம், மலையாளம், துளுவம் ஆகிய மொழியினங்களின் சுயநிர்ணய உரிமையையும்; இவையெல்லாவற்றுக்கும் அடிப்படையான திராவிடன் அதாவது திராவிட நாட்டிலுள்ள தனி மனிதன் சுயநிர்ணய உரிமையையும் ஒருங்கே வற்புறுத்துகிறது.

நம் இயக்கம் ஒரு நாட்டு விடுதலை இயக்கம். ஆயினும் நாம் இதைத் தேசிய இயக்கம் என்று கூறுவதில்லை. காரணம் இது தேசிய இயக்கத்தை விட விரிவானது. தேசிய இயக்கங்களுக்கு அப்பாற்பட்டு அவற்றினும் உயர்வுடையது. பிற தேசிய இயக்கங்களைப்போல் அரசியல் வாழ்வை மட்டுமே தழுவாமல் இது நாட்டுமக்கள் வாழ்வை எல்லாத் துறைகளிலுமே வளப்படுத்த விரும்புகிறது. ஆனால் அரசியலமைப்பின் அடித்தளமாகிய சமூக அமைப்பை எந்தத் தேசிய இயக்கமும் தொடாது. திராவிட இயக்கம் சமூக அமைப்பை மாற்றியமைப்பதுடன், அச்சமூகத்தின் அடிப்படையையே அரித்துத் தின்னுகிற பழக்க வழக்கக் கோளாறுகளையும் போலிக் கோட்பாடுகளையும் அழிக்கப் பாடுபடுகிறது.

நேற்றுவரை நாகரிகமற்றிருந்த மேல்நாடுகளில் இன்று விஞ்ஞானம் ஓங்கி வளர்வது அவற்றின் சமூக அமைப்பு முறையில் இக்கோளாறுகள் இல்லாததனாலேயே. திராவிட நாட்டிலும், கீழ்நாடுகளிலும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக நாகரிகம் பரவியிருந்தும், சமூகக் கோளாறுகளாலேயே விஞ்ஞானத்தின் நிழல்பட வழியில்லாதிருக்கிறது. பழைய சமூகத் தீமைகளை அழித்துப் புதிய சமுதாயம் அமைக்க விரும்பும் கீழ்நாட்டு இயக்கம் திராவிட இயக்கம் ஒன்றே. இதுவே தென்கிழக்கு ஆசியாவுக்கு வழிகாட்டவல்ல இயக்கம் ஆகும்.

திராவிட நாடு என்றால் தனிநாடாகவே இருந்தது. பிரிட்டிஷ் இந்திய சாம்ராஜ்யத்தில் அது உறுப்பாயமைந்தது பர்மாவையும் இலங்கையையும்; ஏடனையும், அந்தமானையும், பிற தீவுகளையும் போலவே இந்தியாவும் திராவிட நாடும் பக்கத்துக்குப் பக்கமாக உள்ள அயல் நாடுகளானாலும், இடையே கடலால் பிரிக்கப்பட்ட பிரிட்டன், பிரான்சு நாடுகளின் வரலாறுகளில் காணப்படும் தொடர்புகூட இவ்விருநாடுகளின் வரலாறுகளிலும் கிடையாது. மேலும் தென்னாட்டிலிருந்த தமிழரசரனும், ஆந்திர, சோழ சாம்ராஜ்யங்களும்தான் வடநாட்டை வென்று ஆண்டிருக்கின்றனவே தவிர, வடநாட்டு சாம்ராஜ்யமெதுவும் தென்னாட்டை ஆண்டதில்லை. வடநாட்டை முதலில் ஆரியரும், அவர்களைப் பின்பற்றிக் குஷாணர், சாகர், கிரேக்கர், பாரசிகர், ஹூணர், அராபியர், மங்கோலியர் ஆகியவர்களும் படையெடுத்தும் வென்றும் ஆண்டும் அடிமைப்படுத்தியும் வந்ததுபோல் தென்னாட்டில் எதுவும் கிடையாது. தென்னாட்டு மொழி, பண்பாடு, கலையாலும் அயலாரால் இன்னும் ஒழிக்கப்படவோ சீர்குலைக்கப்படவோ இல்லை. ஆகவே நாம் கோருவது நாட்டைத்துண்டாடியல்ல, அரசியற் பிரிவினை மட்டுமே. பிரிட்டிஷார் போகும்வரை நாம் திராவிட நாடும் சுதந்தரமும் கோரி, அவர்கள் போய்விடுவார்கள் என்பதை அறிந்தவுடன் திராவிடஸ்தானும் திராவிடப் பிரிவினையும் கோரியதன் காரணம் இதுவே.

திராவிடம் என்ற சொல் ஒரு நாட்டையும் ஒரு நாகரிகத்தையும் ஒரு இனத்தையும் குறிக்கின்றது. இம்முத்திறப் பொருட் கூறுகளையும் உணராது பலர் குழம்பலாம். பலர் வேண்டுமென்றே குழப்பலாம். சில இடல் முறையில் விந்திய மலைவரை திராவிட நாடு ஆகும். அந்நாளைய ஆரியர் குஜராத்தையும், மகாராஷ்டிரத்தையும் திராவிட நாட்டுப் பகுதியாகவே குறித்தனர். இன்றும் விந்திய மலைக் கப்பால் திராவிடரும் பல திராவிட மொழிகளும் உள்ளன. ஆனால் அவர்கள் திராவிட இனத்தவர்; திராவிட நாட்டினர் அல்ல. அவர்கள் நாகரிகம் சிதறுண்டு கிடக்கிறது. அவர்கள் பிரச்னைகள் திராவிட நாட்டுப் பிரிவினையால் தெளிவு பெறலாம். திராவிட நாட்டுப் பிரிவினையுடன் சேர்ந்தவையல்ல. நாம் இன்று கோரும் திராவிட நாடு திராவிட நாகரிக எல்லை வரையிலேயே. அதாவது திராவிட மொழிகள் பேசப்படும் பகுதிகளை மட்டுமே நாம் கோருகிறோம்.

திராவிடம் ஒரு இனத்தின் பெயர். ஆரியம் இதுபோன்ற இன்னொரு இனத்தின் பெயர். இரண்டு பெயர்களும் மேனாட்டு ஆராய்ச்சியாளராலேயே கொடுக்கப்பட்டன. மேனாட்டினரால் மதிக்கப்பட்ட மொழி வடமொழியே யாதலால், இரண்டு பெயர்களும் வடமொழியிலிருந்தே எடுத்தாளப்பட்டன. வேறு எந்த வடமொழிச் சொல்லையும் ஏற்காத தனித் தமிழ் வீரத் தலைவர் மறைமலையடிகள் 'திராவிடம்' என்ற ஒரே வடமொழிச் சொல்லை ஏற்றதன் காரணம் இதுவே. வடமொழியில் இச்சொல் இரண்டாயிரம் ஆண்டுகளாக வழங்குகிறது. அதற்கு முன்னும் 'தமிழ், தமிழகம்' என்ற சொற்களே திராவிட மொழி, திராவிட நாடு என்ற பொருள்களில் வழங்கின என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. ஆனால் அக்காலத் தமிழ் தென்னாடு முழுவதும் வழங்கிய முத்தமிழ். முத்தமிழ் என்ற பழந் தமிழ்ச் சொல்லுக்கு ஆரியரும் மேனாட்டினரும் வழங்கிய சொல்லே 'திராவிடம்.'

திராவிடம் இனத்தின் பெயராதலால் நாம் இன வேறுபாட்டைக் கிளறுகிறோம் என்று சிலர் கூறுகின்றனர். இது மனமறிந்த பொய். ஆரியருக்குத் தனிச்சலுகை, திராவிடருக்குத் தனிக் குறைபாடு, இது திராவிட நாட்டிலாவது இருக்கக் கூடாது என்றுதான் நாம் கூறுகிறோம். ஆரிய நாட்டிலும், ஆரிய சமூகத்திலும் ஆரியர் எஜமானர்கள். திராவிடரும் மற்ற ஆரியரல்லாத இனத்தவரும் அடிமைகள். திராவிடர் இந்த நிலையைத் திராவிட நாட்டில் ஏற்க விரும்பவில்லை. இதுவே திராவிட இன உணர்ச்சி. இது இன வேறுபாட்டுணர்ச்சியல்ல. இன ஒற்றுமை, இனத் தன்மதிப்புணர்ச்சி மட்டுமே.

திராவிட இயக்கம் ஒரு நாட்டியக்கம். திராவிட நாட்டுக்கு அப்பால் அது செயலாற்றாது. ஆயினும் இதனுடன் ஒத்த கருத்துடைய "மனிதப் பண்பு" அடிப்படையான முன்னணி இயக்கங்கள் பிற நாடுகளில் உண்டு. அவை திராவிட இயக்கத்துக்கு ஆதரவு தருவது உறுதி.

---

## மாணவர் கடமை

### வில்லாளன் வீரவுரை

[சென்னையில் கூடிய திராவிட மாணவ முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் தில்லை வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆற்றிய சொற்பொழிவின் சில பகுதிகள் கீழே:—

**மாணவர்களே!**

மாணவத்தோழர்களைப் பார்த்து, அடிக்கடி, 'பெரிய மனிதர்கள்' என்று வேடம் போடும் பலர் அரசியலில் சேராதீர்கள் என்று உபதேசம் செய்கிறார்கள்.

நாம் நம்மையே நேரடியாகத் தாக்கும் சமூக நீதி அழிந்துபோனது என்று சேதியைக் கேட்டதும் திடுக்கிட்டோம், துடி துடித்தோம், நம் மனக் கொதிப்பை, மக்களுக்கும், சர்க்காருக்கும் தெரிவித்தோம்.

மந்திரி மாதவமேனனார், மாணவர்கள் கடமை வேறு, அவர்கள் போக்கிலேயே போகவேண்டும்—அதாவது, படிப்பைக் கவனிக்கவேண்டும்—வேறு அரசியல் பிரச்சினைகளில் தலையிடக்கூடாது என்று கண்டித்தார், காமராஜரும், மாணவர்களை வெகுவாக, பலமாகத் தாக்கினார். நம்மை, கருப்பு, சிகப்பு கழுகுகள் தூக்கிக்கொண்டு ஓடிவிடும் என்று 'பூச்சாண்டி' காட்டுகிறார்.

ஆனால், இவர்களின் பழைய ஜாதகம் நமக்குத் தெரியாததல்ல—இவர்கள் நாம் செய்த போராட்டங்களை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு பீடமேறியவர்கள். இன்று உபதேசம் செய்கிறார்கள்!

மாணவர்கள் அரசியலில் சேரக்கூடாது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். நேற்று சென்னையிலே நடந்த தடியடி—அதிலே அடிபட்ட தந்தையைப் பார்க்கிற மகன், தாயைப் பார்த்து துடிக்கிற மகள், அண்ணனைப் பார்க்கிற தம்பி—அவர்கள் மாணவர்கள்தான்! ஏன் என்று கேட்கமாட்டார்களா? இந்த ஆட்சியை ஒழித்துக் கட்டுவோம் என்று விறிட்டெழமாட்டார்களா?

குன்றத்தூரில் குண்டடிபட்ட அண்ணனைப் பார்க்கிற தம்பி, தங்கைமார்கள், மாணவர்கள் என்பதற்காகவே, அவர்கள் அடிபட்டது அரசியல் காரணத்திற்காக என்று எண்ணி அடங்கிக் கிடப்பரா? ஆத்திரங்கொள்ளமாட்டார்களா?

தலைவர் பேச்சிலே குறிப்பிட்டார், மாணவப் பருவம் ஒரு பாலைவனச் சோலையென்று! ஆனால், தன்னுடன் பிறந்தவர்கள் அனைவரும் 'சஹாரா'வில் கிடந்து வாடும்பொழுது மாணவர்கள் சோலையிலே குதூகலமாக இருக்கமுடியுமா?

இம்மாதிரி நாட்டைப் பார்க்காத, இனத்தின் கொடுமைகளை ஒழிக்கமுடியாத படிப்பைவிட அவர்கள் சொல்கிற 'அரசியலையே' ஏற்போம். அதுவே எங்கள் படிப்பு என்று கூறுவோம்.

**பெற்றோர்களே!**

திராவிட இயக்கத்திலே இளைஞர்கள்—அதுவும் கலை பயிலுங் காளைகள் சேர்தல் கூடவே கூடாது என்று எண்ணிடும் பெற்றோர்கள் ஏராளம். அவர்கள் திராவிட இயக்கத்தைத் தவறாக புரிந்துகொண்டவர்கள். ஆகவேதான் தடுக்கிறார்கள்.

தாயின் கண்ணீர், சர்க்காரின் 144ஐவிடக் கொடுமையானது! தந்தையின் உருட்டு விழிகள், மிரட்டிடும் பேச்சு, ஆளவந்தாரின் குண்டாந் தடியடி, குண்டு வீச்சை விடக் கொடுமையானது—இந்த இரண்டாலும் மாணவர்களைத் தடுக்கிறார்கள்.

இதற்குக் காரணம், நம் படிப்பு பாழாகிறதே என்ற ஒரே ஏக்கத்தால்! அது தவறு—திராவிட இயக்கமே அறிவு வளர்ச்சி ஆலயம்! அதில் சேர்வதால் அறிவு விரியும்—சிந்தனை பெருகும் படிப்பு பாழாகாது.

வேண்டுமானால் அவர்கள், ஒவ்வொரு பள்ளியிலும் நன்றாகப் பேசுபவன், நன்றாக எழுதுபவன், நன்றாகப் படிப்பவன், யார் என்று பார்க்கட்டும். அவர்களெல்லாம் நம் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள்.

பெற்றவர்கள், தங்கள் காலத்திலே செய்திருக்க வேண்டியதை, செய்ய மறந்ததை, செய்ய விட்டு விட்டதை அவர்களின் பிள்ளைகள் செய்ய பிரயத்தனப்படுகிறார்கள். இந்தப் புனிதமான காரியத்திலே பெரியோர்கள் தடைக் கற்களாக இருக்கக்கூடாது. தங்களால் உதவி செய்ய முடியாவிட்டாலும், ஒதுங்கிக் சொள்ள வேண்டும். பெற்றோர்கள் தம் மக்களுக்குச் செய்ய வேண்டிய பெருங்கடன் அவையத்து முந்தியிருப்பச் செயல்தான்.

மாணவர்களுக்குரிய கடன், பெற்றோர்களின் செவிகளில், அவர்தம் மக்கள் சான்றோர்கள் என்று கேட்டிடச் செய்வதே! ஆகவே பெற்றோர்கள், தம் மக்களை நல்லறிவுப் பணிகளில் ஈடுபடுவதைத் தடுக்கக்கூடாது!!" என்று பேசினார். மேலும் சமுதாயத் துறையில் மாணவர்கள் தங்கள் ஓய்வு காலங்களிலேயே அரிய பெரிய தியாக நடவடிக்கைகள் செய்ய இயலும் என்று குறிப்பிட்டார்.

வெளிவந்துவிட்டது
அண்ணாதுரை
(இரண்டாம் பதிப்பு)
மா. இளஞ்செழியன்
(ஆசிரியர், 'போர்வாள்') தீட்டியது.
அழகிய மேலட்டை :: உயர்ந்த பதிப்பு
விலை 0—5—0
விவரங்கட்கு: திராவிடன் பதிப்பகம்
A. P. B. 18, வேலூர் N. A.

# இலட்சிய இதழ்கள்

[மு. கருணாநிதி.]

வானத்திலே நிலவு பவனி நடத்துகிறது. திராவிடத்திலே முன்னேற்றக்கழகம் பணி புரிகிறது. அழகு தெளிக்கும் நிலவைச் சூழ்ந்து விண்மீன்கள் ஒளி இறைக்கின்றன. அறிவு தெளிக்கும் கழகத்தைச் சூழ்ந்து மாணவமணிகள் செயல் இறைக்கின்றனர். 'நாட்டின் நரம்புகள் — இன்று ஏட்டிலே கண் செலுத்துபவர்கள்' என்ற உண்மையை நல்லறிவாளர்கள் நவிலக்கேட்டோம். நாடு சுற்றியோர்—ஏடு படித்தோர்—பாடுபட்டோர்—இத்தனைபேரும் கேடுகளைய சேர்ந்தெடுத்தபடை, மாணவப்படை. மாணவப் படையின் மாண்புகள் குறித்து-ஆணவங்கொண்டோர் இப்படையின்முன் அலறிச்செத்த நிலை குறித்து-பல்வேறு நாட்டின் சரித்திரங்கள்........படிப்போரையும் துடித்திடச் செய்யும் வகையில் தீட்டப்பட்டுள்ளன.

மாணவப்பருவமிருக்கிறதே — மாணவநிலையல்ல—பருவத்தைக் குறிப்பிடுகிறேன் — முறுக்கேறிய பருவம் — முட்டவரும் காளையையும் மோதிக்கொல்லுகின்ற பருவம்—துணிவுமிக்கபருவம்—தொண்டு புரியும் உள்ளங்கொண்ட தூய்மைப் பருவம் — இலட்சியப்பாதையிலே இடர் கண்டு சிரித்து — துன்பம் தொடர் கதையானல் அதையும் ரசித்து —எடுத்த காரியத்தை எப்படியும் நிறைவேற்ற ஆர்வ அலைகளால் மோதுண்டு வேங்கைப்புலியென சீறிச் செயலாற்றும் பருவம்- இத்தகைய ஈடு இணையற்ற இளமைப் பருவம் — இலட்சியத்துக்காகமட்டுமே தியாகம் செய்யப்பட்ட நாடுகள் பலப்பல.

இன்பவிளையாட்டு—ரசமான கேளிக்கை — ரதிதேவிகளின் மந்தகாசமடி — இப்படி வாலிபத்தை வாரிச்செலவிடுகின்றவர்களும் உண்டு. இவர்களுக்கும் நடுவேதான் நாட்டுக்காகவாழ்வை ஈந்துவிட்ட நல்லவர்களும் நடமாடுகிறார்கள். வீடு துறந்து—காடு சென்று கமண்டலமேந்திகளாகத் திரியவேண்டுமென்பதல்ல; உல்லாச மொழிந்த ஓய்வு நேரத்திலாவது உலகத்தைப்பற்றி நினைத்துப்பார்க்கும் உயர்ந்தபண்பு வளரவேண்டுமென்பதே நமது ஆசை.

போக போக்கியங்கள் மறைந்துவிடும். தியாகத்தழும்புகள் அழியாத—அழிக்கமுடியாத முத்திரைகள். அந்த முத்திரைகளை அதிகமாகப்பெற்றவர்கள் இளைஞர்கள்தான்!

முதிர்ந்தோர் பலமுறை உதாரணத்துக்காக காட்டினாலுங்கூட அவர்களும் இளமையின் பழக்கப்பட்டவர்கள் — அல்லது இளமைப்பருவத்திலேயே தங்களை தயாராக்கிக்கொண்டவர்கள் என்ற அளவிலேதானிருப்பார்கள்.

மாணவர்கள் மாவீரர்கள் என்பது முகஸ்துதியல்ல. தட்டிக்கொடுத்து ஆள் சேர்க்கும் தந்திரமுமல்ல.

சீனாவிலே கொதித்தெழுந்த மாணவர்கள் — திராவிடத்து மாணவர்களால் மறக்கப்பட்டவர்களல்ல. மாணவர்களின் உணர்ச்சி, மண்டலங்களை ஆட்டக்கூடியது என்பது கண்டுதான் மாசேதுங், மாணவர் கழகங்களை சைனாவெங்கும் பரப்பினான் என்பதும் திராவிடத்து இளைஞர் ஏறுகள் படிக்காமல் விட்டதல்ல.

சீனாவின் நானாபக்கங்களிலும் சிதறிக்கிடந்த 'சின்மின் ஸூஸி' சங்கங்கள் மாணவப்பாசறைகள் என்பதையும் — அந்தப் பாசறையிலே இலட்சியவாதிகளாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் ஆரம்பத்திலே எழுபது அங்கத்தினர்கள்தான் என்பதையும் — அந்த ஆரம்ப உறுப்பினர்கள் பலர் 1927 எதிர்ப்புரட்சியிலே உயிர் நீத்தார்கள் என்பதையும்-சீனப்புரட்சி வெற்றியலரிலே இடம் பெற்ற இலட்சிய இதழ்களாக அந்த மாணவர்கள் ஆனார்கள் என்பதையும்-திராவிட மாணவர்கள் சிந்திக்காமலிருந்ததில்லை.

உலக முணர்ந்த உத்தமர்களுக்குத்தான் சொல்லுகிறேன் — சரிதம்படித்த இளம் இதயங்களைத்தான் அழைக்கிறேன்-திராவிடம்இன்றுள்ள திக்கற்ற நிலையில்-தேய்பும் கோலத்தில்-திண்டாடவிடாது தித்திப்பான வாழ்வளிக்கத் திரண்டு வருக எனத்திண்டோள் படைத்தோரை வரவேற்கும் நேரத்தில்தான் குறிப்பிடுகிறேன்...சீனாசிவப்பாவதற்குமுன்—சியாங்கே ஷேக்கின் செங்கோல் சீறும் பாம்பென இருந்த காலத்தில்--கோமிண்டாங்கும் — கம்யூனிஸ்டும் மோதிக்கொண்டன. பெரிய உள்நாட்டுப் போர்!

சீனாவின் விலாவிலே ஜப்பானியனின் தாக்குதல். வெளியே அயலவன்படை, உள்ளே உள்நாட்டுப்படைகளின் கைகலப்பு. இந்த நெருக்கடியான சமயத்தில் ஒரு சோகச்சித்திரம்.

தியாகத்தீயில் குதிக்க ஓடிவரும் திராவிட மாணவர்கள் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டிய நிகழ்ச்சி.

கோமிண்டாங் படைகளின் எதிர்ப்பு பயங்கரமாகிவிட்டது. கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பைத் துளைத்து வெளியேறவேண்டிய சூழ்நிலை. எதிரிப்படைகளின் வியூகத்தை ஊடுருவி வெளியே புறப்பட்டுவிட்டார்கள். புறப்பட்டவர்கள் நீண்டதொரு பயணம் நடத்தினார்கள். சுமார் எண்ணாயிரம்மைல் நீளமுள்ள பயணம் இரண்டு ஆண்டுகள் நடந்திருக்கிறார்கள். ஆண்கள் -- பெண்கள் வயோதிகர்கள்- குழந்தைகள். கொள்கைக்காக லட்சியத்துக்காக கொடுமைகள் பலவற்றை குளிர்ந்த கண்களுடன் ஏற்றுக்கொண்டார்கள். அந்த வழி நடைப்பயணத்தில் கர்ப்பவதிகள் பலர்! சுமார் எட்டுக்குழந்தைகள்பிறந்திருக்கின்றன. கொடுமை பின்தொடரச் செல்கிறவர்களுக்கு குழந்தை வளர்க்க நேரமேது? வசதியேது? வாய்ப்பேச்சு ஏது? குழந்தைகளை வழியில்கண்ட விவசாயிகளிடம் ஒப்புவித்துவிட்டுப்போனார்களாம்!

அப்படி ஒப்புவிக்கப்பட்டு மீண்டும் அந்தத் தாயாரால் பார்க்கப்படாத நிலையடைந்த குழந்தைகளில் ஒன்று, இன்றைய சீனாவின் தலைவன் மாசேதுங்கின் பெண்குழந்தையுமொன்றாம். மாசேதுங் அன்று, ஒரு 'சிப்பாய் போல' இன்று சீனாவின் குரலே அவன்!

இந்த நிலை அவனுக்கு தியாகம் தந்த பரிசு. பரிசை நோக்கி அவன் தியாகப்பயணம் செலுத்தவில்லை பொதுப்பணி யென்னும் கடலிலே புகுந்து கொள்கையென்னும் படகேறிச்சென்றான். துள்ளிடும் கெண்டையென — பரிசு, அவன் படகில்பாய்ந்து விழுந்தது

சீனா சிவந்துவிட்டது. மாணவர்களின் — மாசேதுங் அதைச்செப்பனிட்டார். திராவிடம் தேய்ந்து கிடக்கிறது. மாணவர்கள் மாசேதுங்குகளாக மாறவேண்டும்.

வரப்போகும் திராவிடத் திருநாட்டின் மந்திரிகள் இன்றைய மாணவர்கள் பதவி காட்டி அழைக்கவில்லை; குன்றத்தூர்—சென்னைக் கொடுமைகள் ஏற்படும்-அதைத்தாங்கும் இதயமுடன் வாரீர்! திராவிட முன்னேற்றக் கழக வெற்றிவிழா மலரில் இலட்சிய இதழ்களாகவிளங்கவாரீர்! வீணர்கள் விலகட்டும், விபீடணர் ஒதுங்கட்டும் வெற்றிப் புலிகளே! வெண்கலக் குரலுடையோரே! எழுத்தின் வேந்தர்களே! நீங்கள்தான் வேதனை தீர்க்கும் இன்பக்குரல்கள்!......கலிவு நீக்கும் இனிய நாதங்கள்! வருக நீங்கள் வாழ்ந்து கெட்ட சமுதாயத்தை வகைப்படுத்த!.........

வெற்றி நமதே!

வாழ்க திராவிட மாணவர்
முன்னேற்றக் கழகம்!!

---

# வடாற்காடு மாவட்டத்தில் நம் பணி

## ஈ. வே. கி. சம்பத் சுற்றுப் பிரயாணம்

—X—

வடாற்காடு மாவட்டத்தில் தோழர் ஈ. வே. கி. சம்பத், ஒருவார காலம் சுற்றுப் பிரயாணம் செய்தார். மாவட்டச் செயலாளர் போளூர் சுப்பிரமணியம் உடனிருந்து எல்லா காரியங்களையும் கவனித்து வந்தார். சுற்றுப்பிரயாணத்தின் பொழுது அங்கங்கே உறுப்பினர்கள் சேர்ப்பது, போராட்டங்களில் சிறை செல்வோர் எண்ணிக்கை எடுப்பது, கிளைக்கழகங்களின் செயற்குழுவினைத் தேர்ந்தெடுப்பது, நிர்வாக உறுப்பினர்களைக் கலந்து ஆக்கவேலைகள் குறித்து ஆலோசனை தருவது போன்ற வளர்ச்சிக்கான வேலைகள் நடந்தன.

தோழர் சம்பத் 14—11—50லிருந்து 20—11—50 வரை பல ஊர்களுக்குச் சென்றார். அதன் விபரம் கீழே தரப்படுகிறது.

### 14—11—50

திருப்பத்தூரில் மாலை 6-மணிக்கு நகர வழக்கறிஞர் தோழர் ஜி. என். சாமி பி. ஏ., பி. எல். தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எம். வெங்கட்ராஜு, மணிமொழி, போளூர் சுப்பிரமணியம், ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

### 15—11—50

திருப்பத்தூரிலிருந்து, சுற்றுப்பிரயாணத்திற்கென அமைக்கப்பட்டிருந்த தனிக் காரில் தோழர்கள் செங்கம் வந்து சேர்ந்தார்கள். செங்கத்தில், வடாற்காடு மாவட்டக் கழக உறுப்பினர் தோழர் இராமசாமி தலைமையில் நடந்த தி.மு.க. பொதுக் கூட்டத்தில் போளூர் சுப்பிரமணியம், ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

### 16—11—50

பகல் 1-30 மணிக்கெல்லாம் தோழர்கள் வந்தவாசிக்கு வந்து சேர்ந்துவிட்டனர். அம்மையப்பட்டு என்பது வந்தவாசியிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள சிற்றூர். அங்கு முதன் முதல் நடத்தப்பட்ட நம் இயக்கக் கூட்டம் இதுவே. அதுவும் பல ஆண்டுகள் சைவ மதப் பிடியிலிருந்த பெரியார், தோழர் மாணிக்க சாமியார் என்றவயது முதிர்ந்த கிராம முக்கியஸ்தர் அவர்களின் பெருமுயற்சியாலும் தலைமையிலுமே கூட்டம் நடந்தது குறிப்பிடத் தக்கது. மாலை 6-மணிக்கு வந்தவாசியிலிருந்து எல்லா தோழர்களும் அம்மையப்பட்டு வந்து சேர்ந்தனர் தோழர் சுந்தரம் குழந்தைக்கு தோழர். சம்பத், இளங்கோ என்ற பெயர் சூட்டினார். கொடியேற்று விழாவும் நடந்தது. பிறகு நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ரசாக், தங்கவேல், வி. டி. அண்ணாமலை, போளூர் சுப்பிரமணியம், தில்லை-வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஈ. வே. கி. சம்பத் பேசினர். கூட்டம் நடந்துகொண்டிருந்த பொழுதே ஒலிபெருக்கி கெட்டும் கூட்டத்திற்கு வந்திருந்த ஆயிரக் கணக்கான மக்கள் அமைதியாக இருந்தது குறிப்பிடத் தக்கது.

### 17—11—50

வந்தவாசியிலிருந்து பகல் 2-மணிக்கு புறப்பட்டு ஆரணி வந்து சேர்ந்தனர். தோழர்களை வரவேற்று உபசரித்தனர் ஆரணி தி. மு. க. நிர்வாகிகள். அன்று மாலை 6-மணிக்கு தோழர் குட்டி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் போளூர் சுப்பிரமணியம், ஈ. வே. கி. சம்பத் பேசினர். தோழர் சம்பத் அவர்களுக்கு நகர சார்பாகவும், பேட்டை வாசிகள் சார்பாகவும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. அன்று இரவு புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

### 18—11—50

ஆரணியிலிருந்து புறப்பட்டு மாலை 6-மணிக்கு அகரம் சேரி வந்து, சற்று இளைப்பாறி விட்டு மாலை 7-மணிக்கு மாவட்ட செயலாளர் தோழர் போளூர் சுப்பிரமணியம் தலைமையில், தி. மு. கழக சார்பில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் தோழர் ஈ. வே. கி. சம்பத் "சமுதாய சீர் திருத்தம்" என்பதைப் பற்றி விளக்கிப் பேசினார். நன்றி கூறுதலுடன் சுமார் இரவு 10-மணிக்கு கூட்டம்முடிந்தது.

அன்று இரவு காரில் சுமார் 10-மணிக்கு மேல் புறப்பட்டு, இரவு வேலூர் வந்து தங்கினர்

(6-ம் பக்கம் பார்க்க)

---

## முக்கிய அறிவிப்பு

சி. என். ஏ. வின் பேச்சுக்களையும், எழுத்துக்களையும் எமது அனுமதி பெறுமல் கண்டபடியெல்லாம், பலர் பிரசுரிக்கும் வெளியீடுகளைப் பற்றி நமக்கு பல, புகார்கள், வருகின்றன.

சி. என். ஏ. விடமோ அல்லது அலுவலகப் பொறுப்பாளரிடமே அனுமதி கோராது எதுவும் வெளியிடக் கூடாது என்று நாம் பன்முறை தெரிவித்திருந்தும், இந்தப் போக்கு, இன்னும் தொடர்கிறது.

இதனால் பல சங்கடங்களைத் தாங்கவேண்டிய தொல்லைகள், நமக்கு ஏற்படுகின்றன.

எனவே, சி. என். ஏ. தீட்டிய, கட்டுரை, கதைகள், நாடகங்கள் ஆகியவைகளை எடுத்துக் கையாள விரும்புவோரும் அவரது பேச்சுக்களைப் பிரசுரிக்க விரும்புவோரும், அவருடைய அனுமதியைப் பெறுவது மிக முக்கியமாகும். இனி மேற்பட, இதுபோன்ற முறை நீடிக்குமானல், சட்டப்படி நடவடிக்கை எடுக்கநேரும் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நிர்வாகி
'திராவிடநாடு' அலுவலகம்
காஞ்சி.

திராவிட நாடு

ஞாயிறு] 26—11—50 [காஞ்சி

# பொம்மைகள்

★

*இம்மசோதா சட்டமானல் மடாதிபதிகள் வெறும் பொம்மைகளாகிவிட வேண்டியது தான்.*

*அதிகாரிகள் சொற்படி ஆடுவதைவிட அவர்களுக்கு வேறு அந்தஸ்து கிடையாது.*

*அதிகாரிகளின் அக்கிரமக் குறுக்கீட்டுக்கு உண்மையில் ஒரு எல்லையுமில்லை.*

*எனினும் அந்த சுதந்திரத்தை அடியோடு பறிக்கும் வகையில் தற்போதைய மசோதா அமைந்திருக்கிறது.*

இவை, 'சுதேசமித்திரன்' அருளிய சொற் செல்வங்கள்! சர்க்காரைப் பார்த்து அடிக்கும் சொற் சாட்டைகள்! மித்திரன் மிரட்டுகிறது, சர்க்காரை! அதட்டிச் சொல்கிறது, இது, ஆகாது, கூடாது! சட்டமாக்கினலும், கூண்டேறுவோம், நீதி கோருவோம், என்று வேறு 'அவர்கள்' போரின் அடுத்த சட்டத்தைச் சுட்டுக் காட்டுகிறது.

இப்பொழுது விவாதத் தணலிலே உருகி, உருவாகப் போகும் இந்து மத சொத்து பரிபாலன மசோதாவினைப் பற்றித்தான் இப்படியெல்லாம் கூறி, 'விசுவரூபம்' எடுத்துவிடுவோம் என்று ஆளவந்தாரைப் பார்த்து எச்சரிக்கை விடுகிறது.

இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால், மடாதிபதிகள், பொம்மைகளாகி விடுவாராம். கூறுகிறது — பொம்கைகளாவதால் பொல்லாங்கு நேருமாம்—அடிப்படை சுதந்திரத்தை அழித்திடும் செயலாம் இது!

ஆண்டவன் பெயரால், அறத்தின் பெயரால், தரும காரியங்கள் பெயரால் சேர்க்கப்பட்டுள்ள சொத்தினங்களை, சூதில் சூரர்கள் — வஞ்சகத்தில் வீரர்கள் என்று பட்டம் பெறக்கூடியவர்கள் தமதாக்கிக் கொண்டிடும் சுரண்டிடும் நிலையொழித்திட வேண்டும் என்று முயற்சி தொடங்கினல் முணு முணுக்கிறது என்றால் கூட, அது இயற்கை என்று விட்டுவிடலாம். மிரட்டுகிறது, எச்சரிக்கை விடுகிறது, அபாய அறிவிப்பு தருகிறது!

* * *

மடாதிபதிகள் பொம்மைகளாகக் கூடாது என்பது 'அவர்கள்' திட்டம்—அதற்காக ஆளும் பொறுப்மை ஏற்றுள்ளவர்கள் பொம்மைகளாக இருக்கவேண்டும். 'அவர்கள்' பகுதியை எட்டியும் பார்க்கக் கூடாது. என்ன அது என்று கேட்கக் கூடாது என்று இன்னமும் விரும்புகின்றனர்.

புரோகித புரியாரின் சுக போகங்களுக்கு ஒரு துளி அசைவு, ஆட்டம் கூடாது என்பதற்காகத்தான் அறநிலைய சொத்துகளுக்கு ஒரு திட்டவட்டமான நிர்வாகம் ஆட்சியாளர்-ஏற்படுத்தக் கூடாது என்ற வாதாடுகின்றனர்!

'சர்க்காரே, நீ கல்லாகப் போகக் கடவது' என்று 'சாபம்' இடும் காலம் போய்விட்டது! ஆகவே பொம்மையாகிவிடு என்று கூறுகின்றனர் அவர்கள்.

'கல்லாகச் சபித்தாலும், உமது பாத துளி தினம் படும் வரந்தாரும்' என்று கேட்பது போலத் தான் இந்த ஆட்சியாளர் நடந்துகொள்கின்றனர்.

இவர்கள் நினைத்தாலும் நடுங்கும் பகுதியிலே கால் வைத்திருக்கிறார்கள். அந்தத் துணிவை நாம் தேடித் தந்திருக்கிறோம். நம் பேச்சால் எழுத்தால், நடிப்பால், கருத்தால், கொள்கைகளால் இந்த நாட்டு மக்களின் மனத்தை பக்குவப் படுத்தி வைத்திருக்கிறோம். அதனை மறந்து விட்டு நம்மீது பாய்கிறார்கள்-அடக்குமுறையை ஏவுகிறார்கள்!

புரோகிதபுரி இன்னும் சர்க்காரை மிரட்டத் தயங்கவில்லை. இந்த சர்க்காரோ யார்மீது கோபத்தை திருப்பவேண்டுமோ அதை விடுத்து வேறு பக்கம் திருப்பி, விவேகமற்ற முறையில் 'வீரம்' பேசுகிறது!

சர்க்காரை பொம்மையாகச் சொல்கின்றனர் அவர்கள்—ஆம், நம் சென்னை மந்திரி சபை எற்கெனவே பொம்மையாகிவிட்ட சர்க்கார்-வடநாட்டார் கையில் ஒரு சமயம், வைதீகபுரியாரின் கரங்களிலே ஒரு சமயம் என்று மாறி மாறி விளையாட்டுப் பொம்மையாக இருக்கிறது!

இந்த விளையாட்டு பொம்மையோ, நம்மைப் பார்த்து ஆடாதே, அசையாதே, பேசாதே என்று கூறி, நம்மை பொம்மையாக்கப் பார்க்கிறது!

திராவிட இயக்கம் என்றாலே இன்று ஆள்வோருக்கு மிரட்சியைக் கொடுக்கிறது. 'கனம்கள்' கூட்டங்களிலே இன்று நம்மைப் பற்றிப் பேசுகிறார்கள். 'கனம்கள்' கட்சியைச் சேர்ந்த 'உரத்த குரலர்கள்' பலர் இன்று இதனையே உத்தியோகமாகக் கொண்டுள்ளனர். அதுபற்றிய கவலை நமக்கில்லை—அந்த கவனமும் தேவையில்லை.

திராவிட இயக்கத்தை, பொம்மையாக்கிடத் திட்டமிட்டு, அதற்கான காரணங்களை தேடிடும் பெரும்பணியிலே அவர்கள் ஈடுபடலாம்! ஆனலும் நாம் அவசரப்படவில்லை- ஆத்திரப்படவில்லை- கொஞ்சம் சிந்திக்க வேண்டுகிறோம்.

புரோகிதபுரி, இன்னும் சீறிடும் பாம்பாகவே இருக்கிறது- நாம் பல வாண்டுகள் பாடுபட்டும் இந்த நிலை யென்றால், நம்மைத் தூற்றித் திரிந்திடுவோர் சிந்திக்க வேண்டும்-நம்மை ஒழித்துவிட்ட பிறகு ஏற்படும் பயங்கர நிலையை!

இன்று காங்கிரசாட்சி, நாட்டில் நடமாடும் எதிர்க் கட்சிகளை பொம்மைகளாக்கி விடத் துடிக்கிறது- காங்கிரஸ் கட்சியோ, நாட்டு மக்களையே பொம்மைகளாக நினைத்துக்கொண்டு, நாட்டோரிடம், நல்லறிவாளர் ஏற்காத முறையில், புன்மைக் குணம் படைத்தோரும் நாணிடும் வகையில், எதிர்க் கட்சிகளைப் பற்றிப் பேசித் தீர்க்கின்றனர்-

அவர்களோ, சென்னை சர்க்காரை, பொம்மையாகி விடவேண்டும் என்கின்றனர்- ஆனல் அது ஏற்கனவே பொம்மையாகி விட்டது! அந்த பொம்மை சர்க்காரோ, நம்மைப் பார்த்து 'கல்லாகு' என்கிறது! விசித்திரம் - வேடிக்கைதான் இந்நிலை!

'பொம்மைகள்' கையிலே, நாடு சிக்கிவிட்ட காரணத்தால்தான், வைதீகம், வழக்கு தொடுப்பேன் என்று வம்பு பேசுகிறது-வாழ்வு இங்கு பாழ்நிலமாகிவிட்டது. மக்கள் இங்கு மாக்களாக உலவ வேண்டி வந்துவிட்டது!

பொம்மைகளாக இருப்பதால்தான் ஆட்சியாளர் எதனையும் எதிர்க்க முடியாமல் விழிக்கின்றனர் - இந்நாட்டு ஆட்சியாளர் பொம்மைகளாகக் கூடாது என்பது மட்டுமல்ல, 'உயிருள்ள' ஆட்சி தேவை - நம் நாட்டிற்கு என்பதே நம் கோரிக்கை!

✻

## ★ காஞ்சி மாநாடு ★

✻

*பெருமிதமான அளவில் நடைபெற ஏற்பாடுகள் விமரிசையாக நடைபெற்று வருகின்றன.*

*மாநாட்டின் இரு நாட்களிலும் நாடகங்கள் உண்டு. மாநாட்டில் இசைவாணர்கள் திருச்சி எம். எம். மாரியப்பா, டி. வி. நமசிவாயம், நாகூர் ஹனீபா, கே. ஆர். செல்லமுத்து ஆகியோர் கலந்து கொள்வர்.*

*மாநாட்டில், கைத்தறி கண் காட்சி குமரன் & கோ, நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது.*

*திராவிட நாடு நிலயத்தாரின் பகுத்தறிவுக் கண்காட்சியும் உண்டு.*

*இயக்க நூல்கள் கண் காட்சிக்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகிறது.*

*மாநாட்டில் ஐம்பதுக்கு மேற்பட்ட பேச்சாளர்கள் கலந்து கொள்வார்கள்.*

*பிரமாதமான முகப்பு அலங்காரத்தோடு பெரிய அளவில் மாநாட்டுப் பந்தல் ஏற்பாடு துவக்கப்பட்டுவிட்டது.*

*காஞ்சி மாநாடு—நம் கழக வளர்ச்சியின் வெற்றியாக காட்சி அளிக்கும்.*

*திராவிடப் பெருங்குடி மக்களே, திரண்டு வருக! மாநாட்டின் வெற்றி உங்கள் வெற்றி!*

R K. மூர்த்தி
E. எத்திராஜ்
*விளம்பர உறுப்பினர்கள்.*

## நடக்க இருப்பவை

✻

25—11—50 காட்டுப்பாடியில் வ. உ. சி. நினைவுநாள் கொண்டாட்டம் தோழர் முகவை. வெ. இராசமாணிக்கம் தலைமையில் தோழர்கள் மலேயா சாம்பசிவம், பத்மாவதி, ஜீவானந்தம், 'விடுதலை' ஆசிரியர் குருசாமி பி. ஏ, பேச்வர்,

25—11—50 குருராயப்பேட்டையில் தி. மு. க. திறப்புவிழா, தோழர் குட்டி-சிதம்பரம் தலைமையில் தோழர் இளஞ்செழியன் பி ஏ. (ஆனர்ஸ்) பேசுவார்.

26—11—50 பெங்களூர் ஸ்ரீராமபுரம் வள்ளுவர் வாலிபர்கழக சார்பில் வ-உ-சி நினைவுநாள் கொண்டாடப்படும். தோழர் ரா. தர்மராசன் தலைமையில் தோழர்கள் ஏ-எம்-தர்மலிங்கனர் பி-ஏ., ஆ. சண்முகம், ப. செல்வராசன் பேசுவார்.

26—11—50 பொள்ளாச்சியில் காலை 10 மணிக்கு பகவான் டூரிங் டாக்கீஸில் பீடித் தொழிலாளர் மாநாடு தோழர் எஸ். சதாசிவம் தலைமையில் நடைபெறும். தோழர் எம். எஸ். கனகராசன் திறந்துவைப்பார் தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஜி. என். இராசு ஆகியோர் கலந்துகொள்வர். மாலை பொதுக் கூட்டமும் உண்டு.

26—11—50 இடைக்காட்டூர் கீழ்ப் பகுதியில் தி. மு. க. பொதுக் கூட்டம்-தோழர் க. இரா. சத்தியேந்திரன் பி. ஏ., பி. எல்., தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., எம். எஸ். இராமசாமி, எம். அய்யாச்சாமி பேசுவர்.

26-11-50ல் திருக்கழுக்குன்றம் தி- மு- க- பொதுக் கூட்டத்தில் தோழர் தில்லை-வில்லாளன், பி, ஏ, (ஆனர்ஸ்) பேசுவார்.

27—11—50 நாரணமங்கலம் தி மு கழக துவக்கு விழா தோழர் நா- பெ- இராமசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா- நெடுஞ்செழியன் எம்- ஏ-, எஸ். நெடுமாறன் பேசுவர்.

1-12-50ல் சென்னை கிண்டி இன்ஜினியரிங் கல்லூரியில் தோழர் சி- என்- அண்ணாதுரை, எம், ஏ, The grouth of human knowledge and culture" என்னும் பொருள்பற்றி ஆங்கிலத்தில் பேசுவார்

3—12—50 திண்டுக்கல்லில் தோழர்கள் ஈ- வே- கி- சம்பத், என்- முத்து பேசுவர்.

3—12—50 நாரணபுரம் தி- மு- கழக துவக்க விழாவில் தோழர்கள் எம்- எஸ்- இராமசாமி, இரா- சு- தங்கப்பழம், டி- ஆர்- சுப்பிரமணியம், ஆ- திராவிடமணி பேசுவர்.

4—12—50 சங்கரநயினர் கோவிலில் திராவிட மாணவ முன்னேற்றக் கழக துவக்க விழாவில் தோழர்கள் எம்- எஸ்- இராமசாமி, இரா- சு- தங்கப்பழம், டி- ஆர்- சுப்பிரமணியம், ஆ- திராவிடமணி பேசுவர்.

8—12—50ல் அய்யம்பேட்டையில் தி- மு- க- துவக்க விழா தோழர் அரங்கண்ணல் தலைமையில் தோழர்கள் சி- என்- அண்ணாதுரை எம். ஏ. தில்லை வில்லாளன், பி. ஏ., (ஆனர்ஸ்) பேசுவர்.

### காஞ்சியில்!

26—11—50ல் காஞ்சிபுரம் புதுப் பாளையத் தெருவில், தோழர் சு. தணிகைமலை தலைமையில் தி. மு. க. முதலாண்டு விழா நடைபெறும்.

தோழர்கள் குடந்தை எஸ். கே. சாமி, என். வி. நடராசன், சி. வி. எம். அண்ணாமலை பேசுவர்.



உரிமையாளர், எம். எஸ். சிவசாமி பிரதர்ஸ். தூத்துக்குடி.

# ★ புதிய நாடகம் ★

எழுச்சி முரசு! இலட்சிய கீதம்!

9–12–50 அன்று

★ நாட்டுக்குப் போராடும் வீரமணி
★ காதலில் தவிக்கும் முல்லை
★ இருட்டில் கிடக்கும் ஏகாம்பரர்
★ மருட்டிப் பிழைக்கும் ரங்கனுதர்

வாலாஜா பாத் ராஜா ஹால்

விசித்திர சித்திரங்கள்! வேதனைப் புயல்கள்! வீர வசனங்கள்!

நடிகர்கள்
—
மு. கருணாநிதி,
கவிஞர் கண்ணதாசன்
புலவர் குழந்தையா
ஈழத்து அடிகள்
சி. வி. எம். அண்ணாமலை
எம். என். கிருஷ்ணன்
— —
இயக்க வீரர்கள்!

## வேதனைக் குரல்

கதை, வசனம்:— மு. கருணாநிதி

திராவிட மக்களே, வருக!

நடிகர்கள்
—
அரங்கண்ணல்
தில்லை. வில்லாளன்
கே-டி-எஸ் மணி
வி. சம்பந்தம்
மகாலிங்கம்
பி-எர்-மணி
——
இயக்க வீரர்கள்!

A.


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மார்க்கெட்டுக்கு முன் காணக் கிடைத்ததாகும். சேலத்தில் மட்டும் என்றல்ல, நாடெங்கும் தினசரி நிகழ்ந்து கொண்டிருப்பதாகும்!

3 வயதுக் குழந்தை பிணமாகிப் போக, 12 வயதுப் பையன் அன்னையின் கண்களில் நீர் வழிவதையும், தம்பி எலும்பும் தோலுமாய் இறந்து கிடப்பதையும், தன் வயிறு பசியால் கொதிக்க 'யாரிடம் சொல்வது?' என்று புரியாமல் தவிக்க, கோவணாண்டியாய் குந்தியிருப்பதையும் கண்டு பெற்ற மனம் கொதிக்க, 'ஐயோ!' என்றழவும் பலமில்லாது, கண்ணீர் சிந்திய வண்ணம் அந்த அம்மையார் வீதியிலே இருந்த காட்சி.........! ஐயோ, விவரிக்க முடியாது!!

'பிச்சை' எடுத்து வயிறு வளர்த்தவரல்ல. எத்தனையோ பரதேசிகளுக்கு 'பிச்சை' இடும் நிலையில் வாழ்ந்தவர்தான். ஆனால் அவரே பிச்சை எடுக்க வேண்டியதாயிற்று! 'அம்மா! தாயே! அரை வயற்றுக் கஞ்சி' என்று வீதிகளிலே அலைந்து திரிந்தார்!!

குடும்ப விளக்காகத் தான் வாழ்ந்தார். சேலத்திற்கருகிலுள்ள தாரமங்கலத்தில் ரங்கசாமி முதலியாரின் அருமை மனைவி அவர். பாப்பம்மாள்—35 வயது—தனது கணவனோடு, உயிரும் உடலும் போல வாழ்ந்தார். பல ஆண்டுகள் உருயிரும் ஒருடலுமாகவே குடும்பம் நடத்தினர். அவர்கள் இன்ப வாழ்க்கையின் எதிரொலிகள்–இரண்டு குழந்தைகள்!

தினசரி உழைத்து, அதைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்த ரங்கசாமி முதலியாரின் வாழ்க்கையிலே புயல் வீசிற்று! அவர் செல்வவான் அல்ல — அன்றாடம் உழைத்தால்தான் அவர் குடும்பம் நகரும். உழைப்பையும் சக்தியையும் 'முதலாக'க் கொண்டிருந்த அவரைத் திடீரென பலத்த இடி தாக்கிற்று!

வேலை கிடைக்கவில்லை! அவர் ஒரு நெசவாளி! நூல் கிடைத்தால் அதைத் துணியாக்கி, பணமாக்கி, தன் குடும்பத்தை நகர்த்துபவர். நூல் கிடைக்கவில்லை—வேலையும் இல்லை—வருவாயும் இல்லை!

அலைந்தார், திரிந்தார், திண்டாடினார். பட்டினி! — ஒரு நாள் இரு நாளல்ல, பல நாட்கள்!!

குழந்தைகளின் அழுகை, மனைவியின் சோகம் — அவரை சித்திரவதை செய்தது!

குடும்பத்தின் காட்சியைக் காணச் சகியாது, மனம் நொந்து, எங்கோ சென்றுவிட்டார்! அவர் என்ன ஆனார் என்பதும், தெரியவில்லை.

கஷ்டம் தாங்காது மறைந்துவிட்ட 'கணவனின்' பிரிவால் கதியற்றுப் போன பாப்பம்மாள், தனது அண்ணன் வீட்டுக்குச் சென்றார். அண்ணனும் நெசவாளிதான்! அங்கும் நூல் பஞ்சம்! வேலையில்லை!! பட்டினி!!!

கொடுமை தாங்காத அம்மையார் சேலத்து வீதிகளிலே பிச்சைக்காரியானார்!

புதுத் தொழில் – வெய்யிலும் அலைச்சலும் இரு குழந்தைகளையும் நோய்க்கு ஆளாக்கிற்று.

ஏழைக்கு ஏது வழி? சர்க்கார் ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தார். அவர் பஞ்சை – அவரைக் கண்டாலே சீறினர் அங்கு வந்து போபவர். விரட்டினர், ஆஸ்பத்திரியை விட்டு.

வேதனையின் பிம்பம்–'பிள்ளையோ பிள்ளை!' என்று விலை கூறவில்லை. விலை கூறினாலும், பசியாலும் நோயாலும் எலும்புக்கூடாகி விட்ட அதை யார்தான் வாங்கப் போகிறார்கள்? ஆகவே 'கஞ்சியம்மா கஞ்சி!' என்று, ஒவ்வொரு வீட்டிலும் போய் நின்று கதறலானார். கஞ்சி, தாராளமாகக் கிடைக்கும் நிலையிலாயிருக்கிறது, தமிழ் நாடு! ஒவ்வொரு வீட்டிலும் 'அரிசியோ அரிசி!' என்ற கூக்குரல்தானே – ஆகவே, பட்டினி வளர்ந்ததே தவிர பசி தீரவில்லை!

மூவு-குழந்தை, பிணமாயிற்று! 'பழனி, பழனி' என்று கொஞ்சிப் பெயரிட்ட 3 வயது செல்வன் பிணமானான்! சுதந்திர இந்தியாவின் எதிர்கால பிரஜை இறந்தான்! தமிழ்க்குலத்தின், புது உயிர் ஒன்று மடிந்தது!

* * *

இதயத்தைத் தூள் தூளாக்கும் நிகழ்ச்சி— சுயராஜ்யத்திலே நடைபெறுகிறது.

நெசவாளிக் குடும்பங்கள்–இன்று திண்டாடித் தவிக்கும் நிகழ்ச்சிகள் கொடூரமானவை.

நூல் இல்லை! — என்பதால், பிழைக்க வழியற்று பிச்சைக்காரர்கள் ஆகவேண்டிய கேவல நிலைக்கு ஆட்பட்டு அவதிப்படுகிறார்கள்.

சேலம், காஞ்சி, சங்கரன் கோவில் போன்ற பல இடங்களிலிருந்து வரும் செய்திகளைக் கேட்டால், கல்லும் கரையும்! கடினசித்தனும் கதறுவான்!!

இந்தக் கேவலத்தைப் போக்க, முயலவில்லை, காங்கிரஸ் சர்க்கார்.

"உழைக்கிறேன்! வசதி கொடு" என்று கேட்கும் மக்களுக்குத் தேவையான நூலை வழங்கவும், நல்ல ஏற்பாடு செய்யவில்லை, இந்த சர்க்கார்.

அதன் விளைவாகத் தினசரி பல, 'பாப்பம்மையார்'கள் தோன்றிக்கொண்டேயிருக்கிறார்கள்.

பொன் விளைந்த நாட்டிலே புசிக்கவும் உணவற்று, குழந்தைகள் பட்டினியால் சாக, பரிதவித்து, பரதேசிகளாகிக் கொண்டிருக்கிறார்கள்!

இந்தக் கொடுமையைப் போக்க முயலாமல், 'தடியடியும் துப்பாக்கியும்' நடத்திக்கொண்டு, ஊருக்கு ஊர் உல்லாசப் பிரயாணம் நடத்திக் கொண்டுள்ளனர், மந்திரிமார்கள்!

ஐயோ, திராவிடமே! உனக்கு விமோசனமே இல்லையா! வீரர்களின் விளையாட்டுப் பூமியாகும் கதியா உனக்கு? உன் மடியிலே, உன் குழந்தைகள் செத்து மடிவதா? வந்தாரை யெல்லாம் வாழ்வித்த திருநாடே, இன்ப பூமியே, உனக்கா இந்தக் கதி? ✱

## தண்டனையை எதிர்த்து கண்டனம்

எழுத்துரிமை பறிக்கும் வகையில் பொதுச் செயலாளரை சிறையிட்டபொழுது கண்டனம் எழுப்பிய ஊர்களின் தொகுப்பில் விடுபட்டவை இவை.

| | |
|---|---|
| மதுராந்தகம் | ஆலமரத்துப்பட்டி |
| திண்டிவனம் | துறையூர் |

## வடாற்காடு மாவட்ட செயற்குழு முடிவுகள்

வேலூர் டவுன் ஹாலில் 8—10—50 மாலை 3 மணிக்கு வடாற்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையில் நடந்தது. மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் முப்பது உறுப்பினர்களுக்குமேல் வந்திருந்தனர். ஒவ்வொரு ஊரிலும் கழகம் செய்யும் தொண்டினை எடுத்துக் கூறினர். தோழர் நெடுஞ்செழியன் கிளைக் கழகங்களின் அமைப்பு, வேலை, மத்திய கழகத்துடன் தொடர்பு ஆகியவை குறித்து நீண்டநேரம் பேசினார்.

வேலூர் தி. மு. க. தோழர்களால் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

மறைந்த மறைமலையடிகள், சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி, ஆகியோருக்கு அனுதாபம் தெரிவித்தும், மத்திய கழக திட்டங்களை ஆதரித்தும், பொதுச் செயலாளரின் 144 தடை மீறல் குறித்த கட்டளையை ஏற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. போளூர் சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

8—10—50 மாலை 6 மணிக்கு வேலூர் கோட்டை வெளியில் தி. மு. க. சார்பில் தோழர் கருத்தோவியம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. பேசினார்.

### காட்டுப்பாடி

மீண்டும் காட்டுப்பாடி தி. மு. க. காரியாலயத்தில் கூடிய மாவட்ட செயற்குழு, சென்னை, குன்றத்தூர் அக்கிரமங்களை கண்டித்தும், கண்டனத்தை பிரதமருக்கு தந்தி மூலம் தெரிவிப்பதெனவும், (தந்தி அனுப்பப்பட்டு விட்டது) மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து வராத உறுப்பினர்களை நீக்கிவிடவும், சென்னையில் மத்திய செயற்குழு 23—10—50-ல் கூடிச் செய்த முடிவுகளை ஏற்றும், தடைப்படுத்தப்பட்ட நாடகங்களில் ஒன்றை நடத்தவும், அதனை முதலில் திருப்பத்தூரிலே நடத்தவும், தடை செய்யப்பட்ட நூல்களை படித்துக் காட்டவும், விளக்கவும், அதன் மூலம் எழுத்துரிமைப் போரை நடத்தவும் முன்வரும் இளைஞர்கள் பட்டியலை கிளைக் கழகங்கள் உடனே தயார் செய்ய வேண்டியும், தோழர் ஈ. வே. கி. சம்பத் சுற்றுப் பிரயாண முழுப் பொறுப்பையும் செயலாளருக்கு அளித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ✱

## கொடுமைக்கு மக்கள் எதிர்ப்பு

சென்னை, குன்றத்தூர் கொடுமைகளை எதிர்த்து கண்டனம் தெரிவித்த நகரங்களைமட்டும் தொகுத்து தந்திருந்தோம் சென்றவாரம். அதனைத் தொடர்ந்து அளிக்கிறோம்.

| | |
|---|---|
| திருவாதவூர் | கட்டக்குளம் |
| எட்டயபுரம் | மதுரை |
| சன்னுநெல்லூர் | வீரசோழம் |
| மேப்பாலூர் | தூத்துக்குடி |
| தஞ்சாவூர் | திருச்சுழி |
| கல்லிடைக்குறிச்சி | செயங்கொண்டம் |
| அண்ணாமலைநகர் | குளித்தலை |
| சிதம்பரம் | ஏரல் |
| ஏழாயிரம்பண்ணை | ஆலமரத்துப்பட்டி |
| காட்டாமங்கலம் | தேனி |
| உடுமலைப்பேட்டை | கொளத்தூர் |
| முகலூர் | கோவை (மேற்குவட்டம்) |
| கல்லல் | மாலும்பதி |
| திருத்துறைப்பூண்டி | திருவையாறு |

## தொண்டர் படை

✱

செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டு தொண்டர் படையில் சேர விரும்புவோர் கேரில் கே. டி. எஸ். மணியிடம் வந்து பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

சி. பஞ்சாட்சரம்
கே. டி. எஸ். மணி
தொ. ப. தலைவர்கள்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

## 19—11—50

வேலூர் குயப்பேட்டையில் தினகரன் டாக்கீஸ் எதிரில் காலை 9-மணிக்கு தோழர் போளூர் சுபபிரமணியம் அவர்கள் தலைமையில், வேலூர் குயப்பேட்டை திராவிட முன்னேற்றக் கழகத் திறப்பு விழா நடந்தது. அதில் தோழர் ஈ. வே கி. சம்பத் இயக்க கொள்கைகளை விளக்கிப்பேசினார்.

அன்று மாலை வேலூரிலிருந்து சுமார் 2-மணிக்கு மேல் புறப்பட்டு சுமார் 4-மணிக்கு போளூர் வந்து சேர்ந்தனர்.

போளூர் பழைய பஸ் ஸ்டாண்டில், 19—11—50 மாலை 6-30க்கு போளூர் பிரபல கடலை மண்டி உரிமையாளர் தோழர் பக்கீர் அமத் அவர்கள் தலைமையில் தோழர்கள் திருவத்திபுரம் புலவர் கோவிந்தன் பி. ஓ எல். ஈ.வி.கே. சம்பத் தற்கால அரசியலாரின் போக்கைப்பற்றி விளக்கமாகப்பேசினார்கள். செயலாளர் நன்றிகூற கூட்டம் கலைந்தது.

அன்று இரவு போளூரில் தங்கி, காலை சுமார் 7-மணிக்கு சக்ரமல்லூருக்கு சென்றார்கள்.

## 20—11—50

சக்ரமல்லூர் திராவிட முன்னேற்றக் கழக முதலாண்டு விழா, இரவு 8 மணிக்கு தோழர் போளூர்சுப்ரமணியம்தலைமையில், நடந்தது தோழர் எ. நடராசன் ஆண்டு அறிக்கையைப்படித்தபிறகு, தோழர்கள் ஆர்க்காடு பொன்னம்பலம் முன்னுரையாக பேசிய பிறகு, தோழர் போளூர் சுப்ரமணியம் ஈ.வே.கி. சம்பத் "சமுதாய சீர்திருத்தமும், தற்கால அரசியலாரின் போக்கு" பற்றியும் விரிவுரையாற்றினார்கள். —

## மு. கருணாநிதி சுற்றுப்பிரயாணம்

——

(முன்பு தந்ததுபோக, மிகுதியுள்ள சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் இங்கு தரப்பட்டுள்ளன.)

### திருவத்திபுரம்

16—10—50 மாலை 6-30 மணிக்கு தோழர் போளூர் சுப்ரமணியம் தலைமையில் பொதுக்கூட்டம். தோழர் செல்லமுத்து நாட்டுப் பண் பாடினார். தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், புலவர் கோவிந்தன், சி.வே. சுப்பராயலு ஆகியோர் பேசினர். மழைத்தூரல் இருந்தும் ஏராளமாக மக்கள் கூடியிருந்தனர்.

### ஆரணியில்

திருவண்ணாமலை போகிற வழியில் ஆரணியில் தோழர்கள் மு. கருணாநிதி, போளூர் சுப்ரமணியம், கண்ணதாசன், முல்லைக்கொம்பை சத்யமூர்த்தி, செல்லமுத்து, சி. டி. மூர்த்தி ஆகியோரை ஆரணி தோழர்கள் வரவேற்று உபசரித்தனர். தேவி போட்டோ ஸ்டுடியோவில் புகைப்படமெடுக்கப்பட்டது.

### திருவண்ணாமலை

17—10—50 மாலை 6-மணிக்கு போளூர் சுப்ரமணியம் தலைமையில் இருபதாயிரம் மக்கள் கொண்ட மகத்தான பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. இன்றைய அரசியல் நிலைமையும்-நாட்டு நிலைமையிலுமுள்ள கொடுமையான போக்குகளை நகைச்சுவை ததும்ப தலைவர் குறிப்பிட்டார். நகரசபைத்தலைவர் ப. உ. சண்முகம் முன்னுரை கூறினார். தோழர் செல்லமுத்து பாடினார். தோழர் கண்ணதாசன் சமுதாய நிலைமைகளையும்—கடவுளீயத் தன்மைகளையும் விவரித்தார். தோழர் மு. கருணாநிதி திராவிடநாட்டுப் பிரிவினையையும் அடக்குமுறையையும் குறிப்பிட்டு நீண்ட சொற்பொழிவாற்றினார். வ. ஆ. மாவட்டத்தில் நடைபெற்ற சுற்றுப்பயணத்தில் உடனிருந்து ஒத்துழைத்த தோழர்கள் போளூர் சுப்பிரமணியம், வேலூர் கோ. கிருட்டினன். முல்லைக்கொம்பை சத்யம், சி. டி. மூர்த்தி, ஆகியோருக்கும்—விருந்துபசாரங்கள் நடத்தியவர்களுக்கும், ஆங்காங்கு கூட்டங்கள் நடத்தியவர்களுக்கும் கருணாநிதி பிரச்சாரகர் சார்பாக நன்றி தெரிவித்தார்.

## நன்றி

★

வட ஆற்காடு மாவட்ட சுற்றுப் பயணத்தில் ஆங்காங்கு கூட்டங்களை வெற்றிகரமாய் நடத்திய தோழர்களைப் பாராட்டுவதோடு, சுற்றுப்பயணத்தை அமைத்து வெற்றிகரமாய் நடத்தி முடித்த மாவட்ட செயலாளர் போளூர் கே. சுப்ரமணியத்துக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈ. வே. கி. சம்பத்.

# நாஞ்சில் மாவட்ட செய்திகள்

## மாவட்ட கழக அமைப்பு

## மாநாட்டு வரவேற்புக்குழு

### நாகர்கோயில் அமைப்பு

13—10—50ல் வெள்ளி இரவு 7-மணிக்கு நாகர்கோவிலில் தோழர் கே. மனோகரன் தலைமையில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் புதிய செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. பொதுச் செயலாளர்:— வி. எம். ஜான், துணைச் செயலாளர்:— என். குற்றாலலிங்கம், பொருள் உறுப்பினர்:— பி. சுந்தரம், விளம்பர உறுப்பினர்:— எஸ். சுப்ரமணியம், மற்றைய செயற்குழுவினர்:- கே. சுப்ரமணியம், தேவசகாயம், கே. மனோகரன், வி. சுப்பிரமணியம், பி. வீரபத்ரன், எஸ். ஆறுமுகம், பி. இராமச்சந்திரன், எஸ். நடராசன், எம். அந்தோனி, எம். வேலாயுதம், எஸ். உத்தண்டன், ஆர். சித்ரஞ்சன்தாஸ், பி. எஸ். பிச்சாண்டி, ஆர். எம். கே. இராமசாமி, வி. பழனியாண்டி, ஏ. நாராயணன் ஆகியோர்.

அன்று பகலில் சென்னை, குன்றத்தூர் கொடுமைகளை கண்டித்து சென்னைப் பிரதமருக்கு கண்டனத் தந்திகள் அனுப்பப்பட்டன.

### மாவட்ட அமைப்பு

20—10—50ல், நாகர் கோவிலில், நாஞ்சில் மாவட்ட அமைப்புக் கூட்டம் தோழர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது. ஒவ்வொரு வட்டத்திற்கும் உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். நாகர்கோவில்:— கே. சுப்பிரமணியம், பி. சுந்தரம், பி. வீரபுத்திரன், கே. மனோகரன், வி எம். ஜான், வி. சுப்பிரமணியம், ஆர். சித்தரஞ்சனதாஸ். வடசேரி:— ஏ. இராமசாமி, பி. இராமச்சந்திரன். வீரநாராயண மங்கலம்: — வி. ஏ. கருணாகரன், ஏ. மகராசன். கிருட்டிணங் கோவில்:— என். குற்றாலலிங்கம், எஸ். நடராசன் இரணியல்:— டி. செல்லம், பி. ஆறுமுகம். பலராமவர்மபுரம்:— என். நடராசன், ஏ. அருணாசலம், திருவனந்தபுரம்:— பி. சங்கர், டி. முத்துசுவாமி. அழகனுபுரம்:— ஈ. ஆர். ஆண்டி, கே. தங்கப்பன். இதிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு விவரம்:— பொதுச் செயலாளர்:— வி. எம். ஜான், துணைச் செயலாளர்:— என். நடராசன், பொருள் உறுப்பினர்:— கே சுப்பிரமணியம், விளம்பர உறுப்பினர்கள்:— கே. மனோகரன், ஈ. ஆர். ஆண்டி.

அன்று இரவு தோழர் கே. மனோகரன் தலைமையில் நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு ஆலோசனை கூட்டம் நடந்தது. டிசம்பர் 29, 30 தேதிகளில் நா. மா. தி. மு. க. முதல் மாநாட்டை நாகர்கோவிலில் நடத்துவது எனவும், அறுபது பேர்கள் கொண்ட வரவேற்புக் கமிட்டியைத் தெரிந்தெடுத்தும், இன்னும் கமிட்டியில் சேர விரும்புவோரை சேர்த்துக் கொள்ள கிளைக் கழகங்களுக்கு அதிகாரம் தந்தும், மாநாட்டு பணவசூல் செய்ய முப்பத்தொரு அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குழு தெரிந்தெடுக்கப்பட்டது. அதன் கன்வீனர்களாக தோழர்கள் ஏ. குமாரவேல், ஏ. தேவசகாயம், பி. வீரபுத்திரன், வி. பழனியாண்டி, ஏ. இராமசாமி தெரிந்தெடுக்கப்பட்டனர். மாநாட்டுப் பந்தல், அலங்காரம் போன்றவைகளுக்கு 19 பேர்கள் கொண்ட ஒரு குழு தெரிந்தெடுக்கப்பட்டது. தோழர் ஏ. இராமசாமி எம். சி. கன்வீனராக தெரிந்தெடுக்கப்பட்டார். மாநாட்டுத் தலைவராகவும், திறப்பாளராகவும் முறையே தோழர்கள் இரா. இளம்வழுதி: பி. ஏ. (ஆனர்ஸ்) பி. எல்., அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோ ஆகியோரைக் கேட்டுக் கொள்வதெனவும், இரண்டாவது நாளன்று இரவு சி. என். ஏ. குழுவினரைக் கொண்டு சந்திரமோகன் நாடகம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டன. வரவேற்புக் குழு மாநாட்டுவரவேற்புக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது அதன் விவரம்:— வரவேற்புக்குழுத் தலைவர்:— வி. எம். ஜான், பொதுச் செயலாளர்:— ஏ. இராமசாமி. எம். சி. துணைச் செயலாளர்கள்:— சு. வன்னியப் பெருமாள், பி. ஆறுமுகம். பொருள் உறுப்பினர்:— ஏ குமாரவேலு, விளம்பர உறுப்பினர்கள்:— கே. மனோகரன், வி. சுப்பிரமணியன், எஸ். சுப்பிரமணியம், தொண்டர் படைத் தளபதி:— எஸ், இராமச்சந்திரன்.

28—10—50ல் நடந்த வரவேற்புக் குழுக் கூட்டத்தில் சென்னை, குன்றத்தூர் கொடுமைகளை கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

—✕—


## "திராவிடன்"

ஆசிரியர்: என். வி. நடராசன்

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருகிறது.

ஏஜண்ட் இல்லாத ஊர்களுக்கெல்லாம் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:
'திராவிடன்' காரியாலயம்,
18, பெருமாள் முதலி தெரு,
ஜி. டி. சென்னை—1


✻


## புரட்சித் திருமணம்

26—11—50 ஞாயிறு மாலை 3-மணியளவில் சென்னை இராயபுரம் துலுக்கத் தோட்டம் 3-வது சந்து 20-வது எண்ணுள்ள எனது இல்லத்தில்

தோழர் வி. பி. மாணிக்கவாசகனார் தலைமையில்

எனது சகோதரி

தோழியர் ஞானசவுந்தரி

பட்டிவீரன் பட்டி காந்திய சேவாசங்கத் தலைவர் திரு. சொக்கலிங்கனார் மகன்

தோழர் மதிப்பிரகாசம்

அவர்களை மறுமணம் புரிந்துகொள்ளும் பெருவிழாவில்

தோழர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ., கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், இராயபுரம் பி. இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர்கள் இதனையே அழைப்பாக ஏற்று, வந்து விழாவினைச் சிறப்பிக்கவேண்டுகிறேன்.

அன்பன்

பூ. ஏ. கா. பழனிச்சாமி

குறிப்பு:— மணமகள் தன் கணவனை மணவிலக்கு செய்துகொண்டவர் A.

# ★ கழகச் செய்திகள் ★

---

**முகவூர்**

10—8—50ல் இங்கு நாடார் உயர்தர ஆரம்பப்பள்ளி நிதிக்காக கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இசையரங்கு நடத்தியபொழுது, தி. மு. க. சார்பில் வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது,

**நாகம நாய்க்கன்பட்டி**

15—9—50ல் நடந்த தி. மு. க. செயற்குழு கூட்டத்தில் வளர்ந்து வரும் பசிக் கொடுமையையும், அதைப் போக்காத காங்கிரசாட்சி ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டாலும் நலம் என்றும், சுற்றுவட்டார உணவுத் தட்டுப்பாட்டுக் கொடுமையை போக்க வழிகள் பல உண்டென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவனந்தபுரம்**

17—9—50 காலை 11 மணியளவில் தோழர் சி. பி. செல்லம் தலைமை வகித்து கழக ஓராண்டு வரவு செலவு பரிசீலிக்கப்பட்டு, கழகக் கொள்கை பற்றிய விளக்கவுரையாற்றினார். தோழர் ஏ. கிருட்டிணன் கழகக் கொடி ஏற்றிவைத்தார்,

**மாயவரம்**

24—9—50ல் தோழர் ஆர். பழனிச்சாமி தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசினார்

**பலராமபுரம்**

24—9—50ல் கூடிய செயற் குழுக் கூட்டத்தில், அழைக்கப்பட்ட தலைவர்கள் வர வசதியின்மையால் பிரிவினை விழா ஒத்திவைக்கப்பட்டது. ஆண்டு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது.

**தர்மபுரி**

7—10—50ல் தோழர் இராசகோபால் தலைமையில் நடந்த உறுப்பினர்கள் கூட்டத்தில், சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி, தமிழ்க் கடல் மறைமலையடிகள் மறைவிற்கு வருந்தியும், செயலாளர்:- த. ப. இராஜாமணி, துணைச்செயலாளர்:- டி. கே கிருட்டிணன், பொருளாளர்:- டி. என். குப்புசாமி, விளம்பர உறுப்பினர்:- த. ந. கோபால், நிர்வாக உறுப்பினர்கள்:- கந்தசாமி, அருணாசலம், அருளானந்தம், சண்முகம், குட்டியப்பன், பொன்னுரங்கம், டி. சி. நடேசன், எம். சண்முகம், அப்துல்கான் ஆகியோரையும் கூட்ட அமைப்பாளர்களாக தோழர்கள் த. ப. இராஜாமணி, டி. சி. கிருட்டிணன், டி ஏ. குப்புசாமி, சு. அப்பாவு, மு. அருணாசலம், தங்கவேலு ஆகியோரை தெரிந்தெடுத்தும், அடுத்தக் கூட்டத்திற்கு தோழர் சி. பி, சிற்றரசுவை அழைப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விருத்தாசலம்**

8—10—50ல் தோழர் இளவரசன் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் டி. கே. சீனுவாசன் பேசினார்.

**ஈரோடு**

9-10-50ல் தோழர் எஸ். ஆர். சந்தானம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஆர். பெருமாள், எஸ். அப்பாவு, ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

**வேலூர்**

8-10-50ல் தோழர் கருத்தோவியன் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் தோழர்கள் போளூர் சுப்பிரமணியம், புலவர் கோவிந்தன் பி. ஓ. எல், இரா. நெடுஞ்செழியன் பேசினர்.

**இராஜபாளையம்**

8—10—50ல் தோழர் ம. பொன்னையா தலைமையில் நடந்த தி. மு. க. செயற் குழுக் கூட்டத்தில் சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி மறைவிற்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**புது வரவு!**

வந்தவாசியில், பலவாண்டுகளாக காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டுத் தொண்டாற்றிய தோழர்கள் அப்துல்லா, முனியாண்டி விலாஸ் உரிமையாளர் சீதாராமன் ஆகியோர், காங்கிரசாட்சியின் இன்றைய அடக்குமுறை போக்கு அநீதியானது, அகிம்சா கொள்கைக்கு ஏற்காதது என்று காரணங் காட்டி, காங்கிரசிலிருந்து விலகிவிட்டு தி. மு. கழகத்தில் சேர்ந்து தொண்டாற்றி வருகின்றனர்.

**அரியலூர்**

8-10-50ல் தோழர் எம். மாரிமுத்து தலைமையில் நடந்த தி. மு. க. செயற் குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளரை அழைத்து பாராட்டுக் கூட்டம் நடத்துவதெனவும், உறுப்பினர் புத்தகம் வரவழைத்து, உறுப்பினர்கள் சேர்ப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**காஞ்சிபுரம்**

8-10-50ல் கருக்கினிலமர்ந்தவள் கோவில் தெருவில் தி. மு. க. கிளை ஏற்படுத்த தோழர் அ. அண்ணாமலை தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடந்தது. அழகிரி அறிவு மன்றம் (தி. மு. க. கிளை) எனப் பெயரிடுவதெனவும், கழகத்திற்கு குறைந்தது 40 உறுப்பினர்கள் பதிவாக வேண்டுமென்றும், செயலாளர்:- க. மு. செயராமன், துணைச் செயலாளர்கள்:- எல். ஆனந்தவேலு, பொருளாளர்:- ச. ஆனந்தம், விளம்பர உறுப்பினர்கள்:- ச. ஏகரம்பரம், சோ. ஆறுமுகம், மற்ற செயற் குழுவினர் பதினெழுவர் எனவும், கழகத் திறப்பு விழா நவம்பர் 5ல் நடத்துவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

8-10—50ல் திராவிட மறுமலர்ச்சிக் கழக செயற்குழுக் கூட்டம் தோழர் சே. கோ. பெருமாள் தலைமையில் கூடி, அண்மையில் நடந்த சிவகெங்கை மாநாட்டுத் தீர்மானங்களை ஏற்றும், தடை மீறல் சம்பந்தமாக தலைமை நிலையத்திற்கு எழுதிக் கேட்க, செயலாளர் டி. சபாபதி அவர்களுக்கு அதிகாரம் தந்தும், இக்கழகத்தின் 3-வது ஆண்டு விழாவை நவம்பர் 26ந் தேதி நடத்துவதெனவும், ஆண்டு விழா நிதிக் கமிட்டி ஒன்பது பேர் அமைப்பதெனவும், சந்தா வசூலிக்க தோழர் வேலப்பனை நியமிப்பதெனவும் செங்கற்பட்டு மாவட்ட செயற் குழுவிற்கு தி. மு. க. சார்பாக எம். பி. தாண்டவமூர்த்தி, டி. சபாபதி, கே. கண்ணன் ஆகியோரை தேர்ந்தெடுத்தும், அண்ணா அவர்களின் பாராட்டுக் கூட்டத்திற்கு நன்கொடை வரவு ரூ. 76—12—0, செலவு ரூ. 60-0-3, மிகுதி ரூ 16-11-9 எனவும், மிகுதியைப் பொருளாளரிடம் ஒப்புவிப்பதெனவும், இக்கழகத்தின் சார்பில் ஒரு சொற்பயிற்சி மன்றம் திறப்பதெனவும், காஞ்சி பிரபல ஜவுளி வியாபாரியும், இக்கழக ஆதரவாளருமாகிய திரு. எம். வி. எம். பச்சையப்பனாரின் உருவப்படத்தை திறப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருப்பத்தூர்**

8—10—50ல் நடந்த செயற்குழுக் கூட்டம் தோழர் சி. ஆ. ஏ. இளம்பிறை, தலைமையில் நடந்தது. செயலாளர்:- சி. ஆர். ஏ. இளம்பிறை, உதவிச் செயலாளர்:- சி. எம். எஸ். பாஜ், பொருள் உறுப்பினர்:- மு. இளங்கோ, விளம்பர உறுப்பினர்:- ஏ. இராமசாமி மற்றைய செயற் குழுவினர்:- எஸ். நஞ்சப்பன், தன. நடராசன், ஆர். ஏஸ். மணி, என். வி. கே. மூர்த்தி, டி. என். வேணி, கோபாலன், பி. எம். வேணுகோபால், சி. ராசகோபால், டி. ஆர். அருணாசலம், டி. டி. கே. சாமி, பி. தண்டபாணி, டி. பி. தங்கவேலு, என். பாஸ்கரன், ஏ. அய்யாகண்ணு, டி. மதியழகன், எம். எஸ். அப்புனு மேலும் ஐந்து உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள செயலாளருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. சேலம் கலலூரித் தலைவர் இராமசாமி, மறைமலையடிகள் மறைவிற்கு வருந்தியும், செயலாளர் அனுமதியுடனேயே, கழகப் பேச்சாளர்களோடு எவரும் கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டுமெனவும் தோழர் மு. கருணாநிதியைக் கொண்டு கூட்டம் நடத்துவதெனவும், செயற்குழு உறுப்பினர்களிடமிருந்து மாத சந்தா அணா 4 வசூலிப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**செயங்கொண்டம்**

11—10—50ல் நடந்த தி. மு. க. உறுப்பினர் கூட்டத்தில் இவ்வாண்டுக்குரிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- வி. விசுவநாதன், துணைச்செயலாளர்:- எம். இராசாராம், பொருளாளர்:- கே. பி. எம். காசிம், விளம்பர உறுப்பினர்:- கே. எஸ். காசிம், மற்றும் ஏழு செயற்குழுவினர் தெரிந்தெடுக்கப்பட்டனர்

**வேளியூர்**

11—10—50ல் காஞ்சி வட்ட 145 என் வேளியூர் கிராமத்தில் தி. மு. க. செயற்குழு அமைப்பாளர்களாக தோழர்கள் பி. சண்முகம், எம். சந்திரசேகரன், எம். குப்புசாமி, ஏ. கங்காதரன், சி. முனுசாமி, கே. கன்னியப்பன், எம். பாலகிருட்டினன், எஸ். சீராளன், ஏ. கணேசன், வி. எஸ். மணி, ஏ பொன்னுசாமி, டி. எம். சுப்ரமணியன் தெரிந்தெடுக்கப்பட்டு, துவக்க விழா வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

**காமயகவுண்டன்பட்டி**

12—10—50ல் தி. மு. க. இரண்டாமாண்டிற்கான செயலுறுப்பினர்கள் தெரிந்தெடுக்கத் தோழர் கே. ஏ. கலையழகன் தலைமையில் நடந்த செயற்குழு கூட்டத்தில் செயலாளர்:- சி. பாண்டியன், துணைச் செயலாளர்:- பெ. அப்பா, பொருளாளர்:- க. இரா. நல்லரசு, விளம்பர உறுப்பினர்:- கே. ஏ. கலையழகன், செயற்குழுவினர்:- மு. நாகப்பன், ஐ. பொன்னையா, பழனியாண்டி, பொன்வேல் வி. பொன்முத்து, வி. கருளிவேலு எனத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் தமிழ்நிதி சொற்பொழிவாற்றினார். மறைந்த பெரியார்கள், சேலம் இராமசாமி, மறைமலையடிகள் ஆகியோருக்கு வணக்கம் தெரிவித்தும், அவர்கள் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும், அண்ணா, பெரியார் ஆகியோரை விடுதலை செய்த சர்க்காரை பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**அரியநாயகபுரம்**

13-10-50ல் தோழர் தங்கச்சாமி தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இராமசாமி, சிவராமன் பேசினர்.

★

## ஆலசத்தம்பி வழக்கு நிதி

| | |
|---|---|
| முன் அறிக்கைப்படி | ரூ 513—2—0 |
| சேலம் கே. வன்னியராஜன் | 20—0—0 |
| மதுரை சி. பழனியப்பன 2வது தடவை | 25—0—0 |
| விருதுநகர் எட்வர்ட் காப்பி ஒர்க்ஸ் | 15—0—0 |
| விருதுநகர் வி. பி. வடிவேல் | 25—0—0 |
| விருதுநகர் எஸ். எம். கே. நடராசன் | 30—0—0 |
| விருதுநகர் எம். எஸ். சி. நாராயணசாமி | 10—0—0 |
| ஓர் திராவிடர் | 50—0—0 |
| | 688—2—0 |

**கவனிக்க**

நடக்க இருப்பவை போன்ற முக்கிய நிகழ்ச்சிகளை, புதன்கிழமைக்குள் அனுப்பி வைத்தால்தான் அந்தவார இதழில் வெளியிட ஏதுவாக இருக்கிறது.

தயவுசெய்து தோழர்கள் இதை கவனிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர்

**பகுத்தறிவு**

அறிவு வளர்க்கும் திங்கள் இதழ்
ஆசிரியர்: ப. கண்ணன்

மேனாட்டுப் பகுத்தறிவாளரின் கருத்துரைகள், அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
சிறு கதைகள், கவிதைகள், நிறைந்த மாதப்பதிப்பு. தொகுத்து வைத்துப்
படித்துணரத் தக்க பயனுள்ள வெளியீடு.

தைத்திங்கள் முதல் நாள் முதல் இதழ் மலர்கின்றது

தனிப்பிரதி 0—2—0 ஆண்டுக் கட்டணம் 1—8—0

எங்கும் விற்பனையாளர் தேவை

விவரங்களுக்கு
மேலாளர் 'பகுத்தறிவு' அலுவலகம்
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

A.

★ கைத்தறித் துணிகளையே வாங்குங்கள் ★

1-ம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| மூர்மார்க்கெட் | — எச். அப்துல்லா |
| சதுரங்கபட்டினம் | — க. ப. அழகரசு |
| ராயபுரம் | — நா. து. மகாதேவன் |
| மயிலாப்பூர் | — கே. வடமலை |
| காஞ்சிபுரம் | — கே. டி. எஸ். மணி |
| ” | — வி. பி. சிவம் |
| கொத்தவால்சாவடி | — ப. தங்கலிங்கம் |
| கிருஷ்ணாம்பேட்டை | — என். ராதாகிருஷ்ணன் |

20-11-50ல் விடுதலையடைந்த தோழர்கள்:-

| | |
|---|---|
| புரசை | — ஏ. தர்மலிங்கம் |
| ” | — டி. கோவிந்தன் |

## சிறை நீங்கிய வீரருக்குப் பாராட்டு

செங்கற்பட்டு:- 19-11-50 அன்று மாலை சிறை நீங்கிய தோழர் ச. ப. அழகரசுவைப் பாராட்டி ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் திராவிட மாணவ முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் சின்னையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இராம. அரங்கண்ணல், தில்லை. வில்லாளன் ஆகியோர் பேசிய பின், பொதுச் செயலாளர் அண்ணாதுரை, சிறை நீங்கிய தோழர்களைப் பாராட்டியும் நாட்டு நிலை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

காஞ்சிபுரம்:— 20—11—50 அன்று சிறையிலிருந்தும் விடுதலையான தோழர்கள் கே. டி. எஸ். மணி, வி. பி. சிவம், ஆகியோரைப் பாராட்டி மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள், ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். பெருவாரியான மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

பாராட்டுக் கூட்டத்திற்கு தோழர் இராம. அரங்கண்ணல் தலைமை தாங்கினர் - தோழர்கள் காஞ்சி. கலியாணசுந்திரம், தில்லை. வில்லாளன், ஆகியோர் பேசியபின் தோழர் கே. டி. எஸ். மணி சிறைவாச அனுபவம் குறித்து விளக்கி 'பாராட்டுக் கூட்டத்தை அறப்போருக்குப் பயணம் சொல்லிக்கொள்ளும் கூட்டமாகவே கருதுகிறேம்' என்று கூறினர்.

பிறகு சிறையிலிருந்து விடுதலையான தோழர்களைப் பாராட்டி பொதுச் செயலாளர் சி. என். ஏ. நீண்டதொரு சொற்பொழிவாற்றினர்.

பொதுச் செயலாளருக்கும், சிறை நீங்கிய வீரர்களுக்கும் பல கழகங்களின் சார்பில் ஏராளமான மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

## குடந்தை தோழர்களுக்கு

குடந்தை நகரத் தோழர்களில் 'திராவிட நாடு' சந்தாதாரராக சேர விரும்புபவர்கள், தங்கள் முகவரியை எங்களுக்குத் தெரிவித்தால், நேரில் வந்து பதிவு செய்து கொள்கிறோம்.

கே. ஏ. ஆர். பிரதர்ஸ்,
'திராவிட நாடு' ஏஜண்ட்
C/o. பழனி முருகன் ஸ்டால்,
பெரிய தெரு, கும்பகோணம்.


திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக

திருவண்ணாமலையில்

2—12—50 இரவு 9-30-மணிக்கு

நடிப்புலவர் கே. ஆர். இராமசாமி

குழுவினர் நடிக்கும்

★ ஓர் இரவு ★

(சி. என். ஏ. தீட்டியது.)

நாடகம் நடைபெறும்

டிக்கட்டுகள், பிறவிபரங்களை செயலாளர், தி. மு. க. திருவண்ணாமலை என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

Ad.


# செங்கற்பட்டு மாவட்ட செயற்குழு

## குன்றத்தூர் வழக்கு நிதி நாடகம்

### காஞ்சியில் மாநாடு

19-11-50 காலை 11-மணியளவில் காஞ்சிபுரம் 'திராவிட நாடு' அலுவலகத்தில் செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு கூட்டம், மாவட்டச் செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடந்தது.

மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பதினேழு உறுப்பினர்கள் வந்திருந்தனர். குன்றத்தூர், மாங்காடு பகுதிகளைச் சேர்ந்த தோழர்கள் குன்றத்தூர் வழக்கில் சம்மந்தப்பட்டவர்கள்— இன்னும் ஏராளமான இயக்கத் தோழர்களும் கூடியிருந்தனர்.

பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களும் கூட்ட நடவடிக்கைகளை நேரிலிருந்து கண்காணித்தார்.

செயற்குழுவினர்கள் கூடிச் செய்த முடிவுகளின் விவரம் கீழே:—

(1) சின்னகாஞ்சிபுரம் அறிவு வளர்ச்சிக் கழகம், பெரிய காஞ்சிபுரம் திராவிட முன்னேற்றப் பகுத்தறிவுக் கழகம் ஆகியவைகளின் சார்பில் முறையே தோழர்கள் ஏ. சுந்தரம், கே. ஆர். இராசகோபால், எம். ஆர். வெங்கடேசன், வி. இராசு ஆகியோர் மாவட்டக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

(2) 24—10—50ல் சென்னைக்கு ஆச்சாரியார் வந்தபொழுது கருப்புக் கொடி பிடித்து, தி. மு. க. செயற்குழு முடிவுப்படி தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கச் சென்ற கழகத் தோழர்களையும் பொது மக்களையும் கேவலமாக நடத்தியதோடு கொடுமையான முறையில் தடியடிக்கு ஆளாக்கி பலர் படுகாயமடையுமளவிற்கு மோசமாக நடந்துகொண்ட போக்கை மாவட்டக் கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது.

(3) 26—10—50 குன்றத்தூரில் பேச்சுரிமையை நிலை நாட்டும் நோக்குடன் அமைதியான முறையில் சென்ற தோழர்களை கைது செய்ததோடு, எட்டுமுறை துப்பாக்கியால் சுட்டும் பல தடவைகள் தடியடிப் பிரயோகம் செய்தும் கொடுமையான வகையில் மக்களை அவதிக்குள்ளாக்கிய ஆட்சியாளரின் போக்கைக் கண்டிக்கிறது.

(ஆ) மேற்படி சம்பவம் குறித்து பகிரங்க விசாரணை செய்யப்பட வேண்டுமென சென்னை சர்க்காரை மாவட்டக் கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

(இ) மேற்படி சம்பவங்களிலெல்லாம் அடக்குமுறைக் கொடுமைக் காளாகியும் நெஞ்சுறுதியோடு சிறை சென்றும், பல இன்னல்களுக்காளாகியும் வேதனைக்கு ஆட்பட்ட கழகத் தோழர்களின் வீரத்தை மாவட்டக் கமிட்டி பெருமிதத்தோடு பாராட்டி, அவர்கள் சேவைக்கு வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(4) குன்றத்தூர் சம்பவத்தின் எதிரொலியாக கழகத் தோழர்கள்மீது தொடரப்பட்டுள்ள வழக்கை ஏற்று நடத்துவதென முடிவு செய்வதோடு, அந்த வழக்கு நிதிக்காக தோழர் மு. கருணாநிதி நாடகம் ஒன்றை 9-12-50ல் நடத்துவதெனவும், அதற்காக செயற்குழு வொன்றும் அமைப்பதெனவும் தீர்மானிக்கிறது.

(5) செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டை காஞ்சீபுரத்தில் டிசம்பர் 23, 24 தேதிகளில் நடத்துவதெனத் தீர்மானிக்கிறது.

(ஆ) இரண்டு நாட்களிலும் நாடகங்கள் நடத்துவதென்றும் மாநாட்டு வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது. தலைவர்:- சி. வி. எம். அண்ணாமலை செயலாளர்கள்:- டி. சபாபதி, செ. கோ. பெருமாள், தொண்டர் படைத் தலைவர்கள்:- பஞ்சாட்சரம், கே. டி. எஸ். மணி, விளம்பர உறுப்பினர்கள்:- எதிராஜ் ஆர். கே. மூர்த்தி, பொருளாளர்:- சி. என். அண்ணாதுரை.

(இ) 25 பேர் கொண்ட வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

(6) மாநாட்டுப் பந்தலுக்கு மு. அரங்கசாமி பந்தல் எனப் பெயரிடத் தீர்மானிக்கப்பட்டது.


நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக

★ முதல் மாநாடு ★

29—12—50, 30—12—50 வெள்ளி, சனி, தேதிகளில் நடைபெறும்

தலைவர் இரெ. இளம்வழுதி பி. ஏ., (ஆனர்ஸ்) பி. எல்.

துவக்குபவர் என். எஸ். இளங்கோ

சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், இன்னும் இயக்க தோழர்கள் பலரும் கலந்துகொள்வர்.

வரவேற்புக் குழுத் தலைவர்:— வி. எம். ஜான் துணைச் செயலாளர்கள்:— எஸ். வன்னியப் பெருமாள், பி. ஆறுமுகம்.

செயலாளர்:— எ. ராமசுவாமி M. C. பொருளாளர்:— எ. குமாரவேல்

விளம்பர உறுப்பினர்கள்:— சே. மனோகரன், வி. சுப்பிரமணியம் எஸ். சுப்பிரமணியம்.


Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press 95. Tirukkachinambi Street Kancheepuram.